

தென்மொழி

சுவடி : 28
ஒலை : 4

விலை :
உருபா 4-00

படச்சுருள்கள் வேகும் நாள்!

நடுத்தெருவில் மருவுகின்ற விலங்குகள்போல்
சிறிதளவும் நாணமின்றிப்
படுத்துருண்டு பிதுங்குகின்ற சதைத்திரளை
உரசுவதைக் காட்சி யாக்கிக்
கெடுக்கின்ற திரைப்படத்துக் கயவர்களுக்
கெதிராகக் கிளர்ச்சி மூண்டு
தொடுக்கின்ற படச்சுருள்கள் செந்தீயில்
வேகும்நாள் தொலைவிலில்லை!

அணியணியாய் நாற்பதுபேர் ஐம்பதுபேர்
நின்றேமெய் வலிப்புக்கொண்ட
பிணியாளர் கைகால்கள் உதறுவதும்
உதைப்பதுவும் போல்உலுக்கித்
துணிவாக நடனமெனக் கூறுகின்றார்
என்னேதான் சுவையைக் கண்டீர்?
தணியாத கலையார்வம் தலைமீறிப்
போனதுவோ வெட்கம்! வெட்கம்!

வெறுக்கின்ற பச்சைமொழி உரையாட்டால்
இசைப்பாட்டால் கதைவிளக்கிச்
சிறுக்கிகளை இறக்குமதி செய்திங்கே
பெயர்பெற்ற கலை வளர்க்கும்
பொறுக்கிகளுக் கொருபாடம் புகட்டுகின்ற
வகையினிலே அரங்குதோறும்
பறிக்கின்ற படச்சுருள்கள் செந்தீயில்
வேகும்நாள் தொலைவிலில்லை!

— இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. உ0உஎ : மேழம் 1996 ஏப்

கிளர்ந்தெழும் தமிழினம்!

மூச்சுள்ள வரைக்கும் உலகத் தமிழின
முன்னேற்றம் ஒன்றே பேசுவேன்! - அதில்
ஏச்சுகள் பேச்சுகள் ஆயிரம் வரினும்
எதிர்நின் றிருகை வீசுவேன்!

காசுள்ள வரைக்கும் கையுள்ள வரைக்கும்
கவின்தமிழ் ஒன்றே பரப்புவேன்! இதை
மாசுள்ளம் கொண்டே மதித்திடார் செயல்களை
மண்மே டிட்டே நிரப்புவேன்!

காலுள்ள வரைக்கும் கருத்துள்ள வரைக்கும்
காடுமே டெல்லாம் முழக்குவேன்! - என்
மேலுள்ள அன்பால் எனைப்பற்று வோர்க்கும்
மேலும்மேல் அவ்வினை பழக்குவேன்!

உயிருள்ள வரைக்கும் உடலுள்ள வரைக்கும்
ஒவ்வோர் அணுவிலும் தமிழ்மணம்! அவை
அயர்வுற்று மறையினும் ஆழ்வெளி பரவினும்
அங்கங்குங் கிளர்ந்தெழும் தமிழினம்!

பாவலரேறு 'தென்மொழி' சுவடி : 18 ஓலை 12

- பாவலரேறு ஐயா அவர்களின் அரிய படைப்பிலக்கியம்.
- செறிவுறு பாக்களொடு விரிவுறு விளக்கங்களையும் உடன் கொண்டது.
- செம்மையான பதிப்பு

நூறாசிரியம்

விலை : உரு : 100.00

பதிவஞ்சலில் பெறவிரும்புவோர்
உரு 115 (நூற்றுப்பதினைந்து மட்டும்) விடுக்க.

தொடர்புக்கு :

தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்
5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி : 28) தி.பி.உ0உஎ – மேழம் (ஏப்பிரல்–’96) (ஓலை 4)

அமைய வேண்டிய ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும்!

அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு ஆட்சிப் பொறுப்பில் யாரை அமர்த்தலாம் என்று நாட்டு மக்கள் நன்றாக எண்ணி முடிவெடுக்க வேண்டிய வேளை நெருங்கிவிட்டது. அரசியல் கட்சிகளெல்லாம் வாய்ப்பு நாடிக் கூட்டணி சேர்ந்து தேர்தல் களத்தில் இறங்கியிருக்கின்றன.

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நாட்டின் பல்வேறு சீரழிவுகளுக்கும் கலவரங்களுக்கும் காரணமாக நடுவகத்திலும் மாநிலத்திலும் அமைந்த நரசிம்மரின் இந்திய தேசியப் பேராயக் கட்சியும், செயலலிதாவின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் கைகோத்துக் கொண்டு தமிழ்நாட்டின் தேர்தல் களத்தில் வலம் வருகின்றன.

பொதுவாக இந்தியத் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்தோ, தமிழ்மொழி, இன, நாட்டு நலன்களில் அக்கறை கொண்டோ செயற்படுவன அல்ல. பொருளியல் சீர்திருத்தம் என்னும் பெயரில் தனியார்மயக் கொள்கையைக் கட்டவிழ்த்துவிட்டும் அயல்நாட்டார் முதலீடுகளை - அயல்நாட்டு முதலாளிகளின் ஆளுமையை ஆரத்தி எடுத்து வரவேற்றும் முதலாளியத்தைத் தாராளமாக வளர்த்து விடுவதோடு மாபெரும் ஊழல் பெருச்சாளிகளின் உறைவிடமாகத் திகழும் நரசிம்மரின் பேராயக் கட்சி தமிழ்நாட்டு

மக்களுக்கு எவ்வகை நன்மையையும் செய்யாது; நயன்மையையும் வழங்காது. ஈழச்சிக்கலிலும் காவிரிச் சிக்கலிலும் அது மேற்கொண்ட நடவடிக்கைகளே போதுமான சான்றுகள்.

இந்தியத் தேசியம் இனிச் செல்லுபடியாகாது; நிலைபெற முடியாது என்பதைப் பேராயக் கட்சியின் பிளவுகள் மெய்ப்பித்துக் காட்டியிருக் கின்றன. அவற்றுள் எந்தப் பிளவாயினும் அது மேற்கூறிய பேராய இயல்புக்கு மாறுபட்டதாக இருக்கும் என்று நம்ப முடியவில்லை.

இனி மதவழி அரசியலில் மிதந்து கொண்டிருக்கும் பாரதீய சனதாக் கட்சி பேராயத்திற்கு மாறான நிலையில் இயங்கினாலும் தமிழை, தமிழின உணர்வுகளை அடையாளமின்றி அழித்துவிடும் முயற்சியில் பேராயத்தை விடப் புலபடி மேலானதே என்பதில் ஐயமில்லை.

அடிப்படைக் கொள்கையையே அடியோடு மறந்து விட்டாலும் இந்தியத் தேசியக் கொள்கையில் மட்டும் இம்மியளவும் விட்டுக் கொடுக்காத பொதுவுடைமைக் கட்சிகள், அரசியல் கட்சி என்னும் நிலையில் குன்றித் தொழிற் கழகங்களாக ஒடுங்கி விட்டன. இங்குச் சாய் கால் உள்ள பிற கட்சிகளின் ஒட்டுண்ணிகளாகி விட்டன.

இந்தியத் தேசியத்தில் பற்றுடைய முன்னேற்றக் கட்சி (பார்வர்டு பிளாக்கு) போன்றனவெல்லாம் ஏறத்தாழச் செயலிழந்து விட்டன. சனதா, சனதாதளம் என்பனவெல்லாம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை செல்லாக் காசுகள்!

இனி, செயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க.; திராவிட இயக்கத்தின் படிநிலை (பரிணாமம) வளர்ச்சி என்று தன்னை வருணித்துக் கொண்டாலும் அது தமிழ் மொழி இன உணர்வுகளுக்கு முற்றிலும் மாறாகவே இயங்கி வந்திருக்கின்றது. தமிழ் அறிஞர் பெரு மக்களையெல்லாம் கொடுஞ் சிறையிலடைத்தும் இழிவழக்குகள் போட்டும் அல்லல் படுத்தி அலைக்கழித்து வருகின்றது. சாதிக் கலவரங்கள் மூள வழிவகுத்துக் கொடுக்கும் வகையில் சாதி யமைப்புகளுக்கு உரமூட்டிவந்துள்ளது. பகட்டாரவார ஆணவ அரசியலில் முத்திரைபதித்து ஊழலின் ஒட்டுமொத்த வடிவமாக உயர்ந்து நிற்கின்றது.

அரசுத்துறைச் சொத்துகளைக் கைப்பற்றிக் கொண்ட செயலலிதா, பொதுமக்கள் உடைமைகளையுங்கூட மிரட்டிப் பறித்திருக்கிறார். அதிகார அத்துமீறல்களுக்கோ, காவல்துறை அட்டூழியங்களுக்கோ செயலலிதா ஆட்சியில் அளவே இல்லை!

இவற்றையெல்லாந் தவிர்த்துப் பார்த்தால், தமிழ் மொழி, இன, நாட்டு நலனில் அக்கறையுடைய கட்சிகளாகத் தம்மை அடையாளங் காட்டிக் கொள்வன திராவிட முன்னேற்றக் கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் என்னும்

மூன்றுமேயாம். ஆனால் பல்வேறு காரணங்களால் இவை ஒன்றிணைய முடியாமல் தனித்தனியே களத்தில் நிற்கின்றன; ஒன்றினையொன்று வீழ்த்தும் எதிர் நிலையினவாகவும் இயங்குகின்றன.

தி.மு.கழகத்தைப் பொறுத்தமட்டில், அது பல்வேறு காலக் கட்டங்களில் ஆளுங்கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் இயங்கிப் பட்டறிவுத் தழும்பேறியது. எந்த நிலையிலும் எழுச்சி குன்றாமல் தொடர்ந்து தமிழ், தமிழர், தமிழ்நாட்டு நலன்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற கட்சி.

பா.ம.க., சாதிக் கூட்டிலிருந்து வெளியேறி வந்து, தேர்தலை வேண்டாத கட்சி என்னும் நிலையையுங் கடந்து தேர்தல் முறையை ஏற்றுச் செயல்பட முன்வந்துள்ள கட்சி. மக்கள் நம்பிக்கையைப் பெற்று வளரவேண்டிய நிலையிலுள்ள கட்சி. ம.தி.மு.க.வும் தன் முனைப்பான நடவடிக்கைகளால் மக்களிடையே நம்பிக்கையைப் பெற்று வளர்ந்து உரம்பெற வேண்டிய நிலையிலுள்ள கட்சியே!

இவற்றுள் எதிரணியை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு வெற்றிவாய்ப்புடைய கட்சியாகவும் கூட்டணி வலுவுள்ள கட்சியாகவும் பொது மக்கள் சாய்கால் பெருக்கமுள்ள கட்சியாகவும் இருப்பது தி.மு.கழகமே. அதன் மேலான குற்றச் சாட்டுகளையும் குறைபாடுகளையும் நாம் அறியாமலில்லை. வெற்றி வாய்ப்புகள் பெருகப் பெருக யார் யாரெல்லாம் வாழ்த்துச் செய்தியனுப்புகிறார்கள், தூது வருபவர்களின் மனநிலை என்ன, எத்தகைய உறவுகளெல்லாம் ஆதரித்துக் குலாவ முற்படுகின்றன, எந்தெந்த ஏடுகள் திசைமாறுகின்றன என்பவற்றைக் கூர்த்தறிந்து செயல்படும் பொருட்டு எச்சரிக்கவும் நாம் கடமைப் பட்டுள்ளோம்.

இங்கு நாம் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் எதிர்க் கட்சிகள் - திறமான எதிர்க் கட்சிகள் இல்லாமையே ஆளுங்கட்சிகள் அத்துமீறி நடக்கவும், முறை கேடுகள் மலியவும் வாய்ப்பாகி விட்டது. ஆளுங்கட்சிக்கு ஆலவட்டம் சுற்றும் எதிர்க் கட்சிகளைப் போலவே, ஆளுங்கட்சி எது செய்தாலும் அதனை எதிர்க்க வேண்டும் என்று கண்மூடித்தனமாக எதிர்க்கின்ற எதிர்க் கட்சிகளாலும் பயனில்லை. அக்கட்சிகளும் வளரவோ நிலைபெறவோ முடியாது என்பது கண்கூடு.

இந்நிலையில் தமிழ், தமிழர், நலன் நாடும் கட்சிகளான தி.முகழகம் ஆளுங்கட்சியாகவும், பா.ம.க.வும், ம.தி.மு.க.வும் எதிர்க் கட்சிகளாகவும் அமையுமானால் தமிழ்நாடு ஓரளவேனும் முன்னேற்றத் திசையில் நகர வாய்ப்பாகும். ஆகவே, தி.மு.கழகம் போட்டியிடும் இடங்களில் தி.மு.க.வும் பிற இடங்களில் முறையே பா.ம.க., ம.தி.மு.க. ஆகியனவும் வெற்றி பெறும் வகையில் தமிழ் மக்கள் தங்கள் ஒப்போலைகளைப் பயன்படுத்துவது நன்று!

— இறை

★ ஆற்றல் மிக்கவர்கள் ஏற்றிருக்கிற முயற்சி!

★ தமிழ் அறிவு - உணர்வு பெருகப் பயன்படும்!

பெருஞ்சித்திரனார் கருத்துகள் மக்களிடையே பரவ வேண்டும்!

'நூறாசிரியம்' வெளியீட்டு விழாவில்
பேரா. அன்பழகனார் உரை.

சென்னை, மார்ச்சு 16 - 'நூறாசிரியம்' வெளியீடு ஆற்றல் மிக்கவர் கள் ஏற்றிருக்கிற முயற்சி என்பதனால் பாராட்டுகிறேன். அது தமிழ் அறிவையும் உணர்வையும் பெருக்கிக் கொள்ளப் பயன்படும் என் பதனால் வரவேற்கிறேன். பாவலரேறு பெருஞ்சித்தி ரனார் அவர் களுடைய கருத்துகளை மக்களிடையே பரப்புகிற முயற்சி மேற்கொள்ளப் பட வேண்டும், என்று `நூறாசிரியம்' வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு கருத்துரையாற்றிய திமுகழகப் பொதுச் செய லாளர் பேராசிரியர் அன்பழகனார் கூறினார்.

பேராசிரியர் அன்பழகனார் ஆற்றிய உரை வருமாறு :

நான் இந்த நிகழ்ச்சியிலே பங்கேற்பதன் நோக்கம் இங்கே நடைபெறுகின்ற நூல் வெளியீட்டு விழாவிலே கலந்து கொள்வது மட்டு மல்லாது பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மறைவின் போது - இறுதி ஊர்வலத்தன்று கலந்து கொள்ள வாய்ப்பில்லாது போய்விட்டமையால் இந் நிகழ்ச்சியிலே பங்கேற்பதன் மூலம் பாவலரேறு அவர்களுக்கு என்னுடைய இறுதி வணக்கத்தை (மரியாதையை)ச் செலுத்துகின்ற முறையில் இந்நிகழ்ச்சியிலே பங்கேற்க இசைந்து வருகை தந்திருக்கின்றேன்.

பெருஞ்சித்திரனார்

தென்மொழியைக் கண்ணொளியை
மூச்சுயிர்ப்பைச் சாகும் வரை

தேர்ந்த உயிர்த் தொண்டெனவே
ஆற்றி வருவேன் - வாழ்வு

தீர்ந்துவிடின் வேற்றுடலம்
மாற்றி வருவேன்!

என்று கூறியிருக்கின்றார். அவர் 'ஒன்று இறை' - இறைவன் ஒருவன் என்ற

முறையிலே இறை நம்பிக்கையுடையவராக இருந்திருக்கின்றார். அப்படியிருந்தாலுங்கூட இறுதிநேரத்திலே ‘இறைவன் என்று ஒருவன் இல்லை’ என்று நொந்து கூறியதாக ஒரு குறிப்பு காணப்படுகின்றது. அப்படிச் சொன்னதிலே தவறேதுமில்லை. அவர் இறைவன் உண்டு என்று நம்பிய போது அதை உறுதியாகச் சொன்னார். இல்லை என்று எண்ணிய போது இல்லை என்று சொன்னார். இப்படிச் சொல்வது முரண்பாடு போலத்தோன்றினாலும் உண்மையில் முரண்பாடு ஏதுமில்லை.

உண்மையிலேயே இறைவன் இருப்பதாக நம்பாதவன் நம்புபவனைப் போல நடிப்பதும், இறைவன் இருப்பதாக நம்பிக்கை யுடையவன் நம்பாதவனைப் போலப் பேசுவதும் தான் முரண்பாடே தவிர உள்ளத்தில் பட்ட உணர்வை உண்மையாக வெளிப்படுத்துவது தவறாகாது.

பெருஞ்சித்திரனார் தம்மைப் பற்றிக் கூறும் போது ‘வெள்ளம் போல் எம் உள்ளத்தாட்சி’ என்று கூறுகின்ற அத்தகைய பெருமிதமான உணர்வுடைய பாடல்களைக் கழக (சங்க)க் காலப் புலவர்களைத் தவிர பிற்காலப் புலவர்கள் யாரும் பாடிவிடமுடியாது. தேவாரம், திருவாசகம் போன்றவற்றில் நுழைந்தால், இன்னும் வள்ளலாருடைய திருவருட்பாவிலே தோய்ந்தால் உள்ளம் நெகிழ்ச்சியடைந்துவிடும்.

‘கழகக் கால மக்களின் மொழிநடை செறிவுடையதாக இருந்தது; அதனாலே அக்காலப் பாடல்களும் அத்தகைய மொழிநடையில் அமைந்தன; நாம் நம் கால மொழி நடைக்கேற்பத்தான் எழுதவேண்டுமே தவிர, அந்தக் கால மொழிநடையைப் பின்பற்றத் தேவையில்லை’ என்று கருகிறவர்கள், ‘அப்படிப் பாட முடியாது’ என்று கருதுகிறவர்கள், ‘பாடினால் பொருள்விளங்காது; பாடப்படுகின்ற கருத்து சென்றடைய வேண்டிய இடத்திற்குச் செல்லாது; பயன் விளைக்காது’ என்று கருதுகிறவர்கள் இருக்கிறார்கள்.

இது ஆற்றல் மிக்கவர்கள் ஏற்றிருக்கிற முயற்சி என்பதற்காக இதனைப் பாராட்டுகிறேன். தமிழ் அறிவை, உணர்வைப் பெருக்கிக் கொள்ளப் பயன்படும் என்பதனால் வரவேற்கிறேன். இப்படி வரவேற்கிறவர்களுடைய எண்ணிக்கை குறைவாகத் தான் இருக்கும் என்பதையும் நான் உணர்ந்து சொல்கிறேன். கதைகள் பரவுவது போலக் கட்டுரைகள் பரவுவதில்லை. கட்டுரைகள் பரவுவதிலும் தமிழறிஞர்களுடைய கட்டுரைகள் அவ்வளவாகப் பரவுவதில்லை. கட்டுரைகள் பரவுகிற அளவுக்குச் செய்யுள் பரவுவதில்லை.

பாவலரேறு பெருஞ்சித்திரனார்மேல் ஈடுபாடுடையவர்கள்தாம் இத்தகைய நூல்கள் பரவுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். இன்னும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். நம்முடைய அருளி

அவர்கள் கேட்கலாம். 'நாங்களெல்லாம் எவ்வளவு முயற்சி எடுத்திருக்கிறோம்' என்று. உங்களுடைய முயற்சி பெரிது. பயன் எதிர்பாராமல் செய்கிற முயற்சிதான். பயன் எதிர்பார்த்தோமென்றால் வெளியிடுவதே பயன் தான். ஆனால் மக்களிடத்திலே சென்று சேர்கின்ற பயன்தான் நேரடியாக வருகின்ற பயன். ஆற்றல் மிக்கவர்கள் இதனைத் தாங்கிப் பெருஞ்சித்திரனார் எண்ணியதை வெவ்வேறு வழிகளிலே உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

நான் பெருஞ்சித்திரனாரிடம் அதிகம் பழகியதில்லை. ஓரிரு முறைதான் பார்த்துப் பேசும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். நான் எழுதிய நூல் ஒன்றின் வெளியீட்டு விழாவில் அவர் கலந்து கொண்டார். நாங்களெல்லாம் தனித்தமிழிலே ஈடுபாடுடையவர்களென்றாலுங்கூடப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தனித்தமிழ் இயக்கத்தை ஒரு மாபெரும் இயக்கமாகவே கட்டிக் காத்து வந்தவர்.

பெரியார் வழிதான் அண்ணாவழி. அது தான் அன்பழகன் வழி. அதற்குத் துணை நிற்கின்ற கலைஞர் வழி. ஆனால் மறைமலையடிகளார் வழி. பாவாணர் வழி. அதுதான் பெருஞ்சித்திரனார் வழி!

நூறாசிரியம் 'கவிதை' என்று சொல்வதற்குப் பொருத்தமில்லை; செய்யுள். நூறு ஆசிரியப் பாக்களால் அமைந்த காரணத்தால் நூறாசிரியம் என்று பெயர் பெற்றிருக்கின்ற இந்நூல் கழகக்கால நூல்போலவே - புற நானூறு போலவே இருக்கிறது. எனக்குப் புறநானூற்றிலேதான் அதிக ஈடுபாடு என்பதனால் சொல்கிறேன், புறநானூறு, அக நானூறு போலவே இதுவும் திணை துறைகளெல்லாம் வகுக்கப் பெற்று அமைந்துள்ளது. அதிலே ஒரு காட்சி :

ஒரு சிற்றில். சிறுமியொருத்தி நீரை ஊற்றி மணலைப் போட்டு எரியூட்டி உணவு படைக்கிறாள். இலைபோட்டுப் பரிமாறுகிறாள். தன்னோடு விளையாடிய சிறுவர்களோடு விளையாடிக் கொண்டு இருக்கிறாள். உண்ணச் சொல்கிறாள். விளையாட்டிலே அந்தச் சிறுமி ஒரு சிறுவனை தன்னுடைய கேள்வனாக ஏற்றும் கொள்கிறாள். மணமக்களாகத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திருமணமான பிள்ளைகள் ஏதோ மாறுபாடு ஏற்பட்டு அவளுடைய தலையைப் பிடித்து அச்சிறுவன் அடிக்கிறான். சிறுவனுடைய தலைமயிரை அவள் பிடிக்கிறாள். உடனே அச்சிறுவன் அம்மே என்று தாயை அழைக்கிறான். அச்சிறுவனின் தாயார் வந்து அந்தப் பெண்ணை மிரட்டுகிறாள். அப்படியா என்று உடனே இச்சிறுமி அப்பே என்று அழுகிறாள். இந்தப் பெண் அப்பாவைக் கூப்பிடுகிறாள். அப்பா ஊரில் இல்லாமையால் தாய் வருகிறாள். இவர்கள் எல்லாரும் அவனுடைய

தாயைக் குறை கூறுகிறார்கள். இவனுடைய தாயும் அவளுடைய தாயும் மோதிக்கொள்கிறார்கள்.

இப்படி தன்னுடைய பெண் வெளியிலே போய் ஊர் வம்பை விலைக்கு வாங்குகிறாள் என்ற செய்தியைத் தன் கணவனிடம் சொல்ல விரும்புகிறாள். இவளை வீட்டில் கொண்டு வைத்தபின்பும் மறுபடியும் அவள் வெளியில் போய் அவனுடனே சேர்ந்து அந்தக் கிழிந்த துணியைக் கட்டியுள்ளானே அவனுடன் சேர்ந்து விளையாடுகிறாள். நாள்தோறும் பேசிக் கொண்டு இருக்கிறாள். ஏதோ குடும்பம் நடத்துவதுபோலக் கால முழுவதும் பேசுகிறாள் என்று தன் கணவனுக்குச் சொல்லி இந்தக் குறும்புத் தனமான தம் பெண்ணை அடக்குவதற்காகவாவது தன் கணவன் வெளியூர் செல்லாமல் - பிரிந்து செல்லாது நின்று தம் பிள்ளையுடனே இருக்க வேண்டும் என்று கூறுகிறாள் என்பதைப் பெருஞ்சித்திரனார் அவர்கள் விளக்கும் பாடல் 'நாணீள் கட்டுரை' என்பதைத் தலைப்பாகக் கொண்டு அமைந்திருக்கிறது.

அதைப்போல இன்னும் பல பாக்கள். பாவேந்தரைப் பற்றி 'தீச்சுடர் எழுத்து' எனும் தலைப்பில்,

"எவர்கொல் துணையே! கவர்புற் றனையே!
குவடுபட நடந்த சுவடும் மாறாது;
வான்பட் டதிருங் குரலுந் தேயாது;
வல்லுயிர் செகுக்க மாற்றலர் வெரூஉம்
கொல்லயில் விழியின் இமையுங் குவியாது;
முன்னைப் பெருமையின் முங்குபே ருணர்வால்
அன்னைத் தமிழ்க்கே அலங்கல் சார்த்தித்
தீச்சுடர் எழுத்தால் பாச்சுடர் கொளுத்தி,
ஓச்சிய தடங்கை வீச்சும் ஓயாது;
உயிருணர் வூரப் பொழிந்துயர் வாழ்க்கைப்
பயிர்செழிப் பூரப் பாடினை கொல்லோ!
இனியே
துவரிதழ்த் தாமரை கவர்துளி மாந்தி
உவப்புற முரலும் கருவண் டொப்ப
இயற்கை தூங்கும் புலவரும் இல்லர்!
மருட்சி அகற்றிடு புரட்சியும் இல்லை!
இருள்துயில் கொண்ட தமிழகம் எழவே
அருள்மொழி நெஞ்சத் தறமும் மடிந்தது!
தயிர்கடை மத்தம் ஆகித் தமிழர்

உயிர்கடைந் தெடுக்கும் நின்பெரும் பிரிவால்
உள்ளமும் அறிவும் ஓய்ந்த
கள்ளமில் உணர்வின் கனியுநர் தமக்கே!''

எனும் இந்தப் பாடலில் பாவேந்தர் எவ்வளவு பெரிய ஆற்றல் மிக்க, தமிழினத்திற்கு ஓர் உயிரூட்டம் தருகிற ஒரு பெரும் பாவலராக - புலவராக விளங்கினார் என்பதை விளக்குகிறது இந்தப் பாட்டு. அவரது மறைவு எவ்வளவு பெரிய அளவில் நமக்கு ஏக்கத்தைத் தருகிறது என்பதை இந்தப் பாடல் கூறுகிறது.

இங்கே உள்ள நம்முடைய அன்புக்குரிய, ஆர்வமிக்க பெருஞ்சித்திரனாருடைய மாணவர்கள் இது குறித்து ஆழ்ந்து எண்ணுதல் வேண்டுமென்று விழைகின்றேன்.பாவேந்தர் எனக்கு ஐம்பது ஆண்டுகள் பழக்கம் நாள்தோறும் பழகாவிட்டாலுங்கூட ஆண்டுக்கு ஓரிரு முறையாவது அவரைக் கண்டு உரையாடி வருவது வழக்கம்.

இந்தப் பாட்டின் கருத்தை உணர்வதற்கு நானே மூன்று இடத்திலே உரையைப் பார்த்தேன். நானே ஓர் ஐந்தாண்டு தமிழாசிரியர் என்று சொல்லிக்கொண்டால் கூட; ஆனால் நானே இரண்டு மூன்று இடங்களிலே உரைபார்த்து விட்டு அந்த இணைப்பு - போக்கு, அமைகிற முறையால் ஒரு சொல்லுக்கு இரண்டு மூன்று பொருளுக்கு இடம் உண்டு என்கின்ற காரணத்தால், இந்த இடத்தில் இந்தப் பொருளில் கையாளப் பெற்றுள்ளது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

இந்தப் பாட்டுக்கு உரை பெருஞ்சித்திரனார் சொல்வது போன்று இன்னொருவர் சொல்ல முடியாது. ஒரு சொல்லை பெருஞ்சித்திரனார் பெய்த போது எந்த உணர்வில் பெய்தாரோ அந்த உணர்வை அப்படியே அவர் வழங்குகின்றபோது சொல்லும் கருத்தை இன்னொரு பெரும்புலவர் வழங்க முடியாது.

அது போல் அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிய - அவர் ஆற்றிய தொண்டு பற்றிய பாடல். அது படிக்கிற போது இனிமையாக இருக்கிறது. கருத்துக்கு நானே ஓரிரண்டு தடவை அதை நோக்கிப் பார்த்து விளங்கிக் கொண்டு படித்தேன்.

“இவனியா ரென்குவி ராயி னிவனே
பேராய மென்னும் பெரும்பெயர்க் களிற்றை
ஆரமர்க் களத்தே அலறக் கிடத்தி
ஊராயத் திருத்தி உருக்குலைத் திட்டுத்
தமிழக வரசைத் தலைமுதல் நிறுத்திய
அமிழா நெடும்புகழ் அண்ணாத் துரையே!

அடித்தலைத் தாழ்த்தித் தமிழ்கொல் தில்லியின்
முடித்தலை நெரித்த மொய்ம்பிவன் மொய்ம்பே!
இமிழ்கடல் வையத்தி யாண்டும் புகழ்கொளத்
தமிழ்விழ வெடுத்த திறலிவன் திறலே!
மடம்படு கொள்கை மறித்துயிர்ப் படக்கி
உடம்பட நிறுத்திய விறலிவன் விறலே!
புறம் பொய்த் தொழுகிய புல்லியர் விதிர
அறம்பெறத் தூக்கிய அரசிவன் அரசே!
தற்சார் புற்ற இளையோர்ப் பிணிக் குறுஞ்
சொற்சோர் வறிகிலா வினைவலி சூழ்தலின்
தோலா திடுகவன் றோளே;
கானிலை கொள்ளுக செந்தமிழ்க் கழலே!"

இவனுடைய கழல் வெற்றி பெறுக - என்று அழகாகப் பாடிய பாடல். அதில் 'அடித்தலைத் தாழ்த்தித் தமிழ் கொல் தில்லியின் முடித்தலை நெரித்த மொய்ம்பிவன் மொய்ம்பே!' என்ற வரிகளுக்கு பெருஞ்சித்திரனார் எழுதுகிறார் :

" உலக மொழிகளுக்கெல்லாம் பழமையானதும், இயற்கையானதும் , தாயானதும், தலைமை சான்றதுமான தமிழ்மொழியை, ஆட்சியதிகார மேலாண்மையாலும் வலக்காரத்தாலும் தன் அடியின் கீழ்ப்படுத்தி, வடமொழியாகிய சமற்கிருதத்தை ஊக்குவிப்பதாலும், மிகப்பிந்திய காலத்தே தோன்றியதும், பன்மொழிக் கலவை மிக்கதும், செயற்கையானதும், ஆட்சிக்கென உருவாக்கிக் கொண்டதும் வட இந்தியாவில் வழங்கி வருவதுமாகிய இந்தியெனும் பயனற்ற ஒரு மொழியைத் தென்னகத்து மக்களிடை வலிந்து புகுத்துவதாலும், நாளுக்கு நாள் சீரழித்து வருகின்ற தில்லியரசின் போக்கை, தன் வலிந்த இந்தி எதிர்ப்புணர்ச்சியாலும் இருமொழிக் கொள்கையாலும் முறியடித்த மொய்ம்பு அண்ணாத்துரையின் ஆட்சியினது என்க". என்று அந்த இரண்டு வரிகளில் இவ்வளவு விளக்கம் சொன்னால் தான் அந்த வரிக்கு விளக்கம் தெரிகிறது.

அதைப் போலத்தான் தந்தை பெரியாரைப் பற்றியும் மிகவும் இனிமையாக அவருடைய ஆற்றலைப் புலப்படுத்தி அவரால் மக்களுக்கு ஏற்பட்ட பயன்களை மிகவும் செம்மையாகப் பெருஞ்சித்திரனார் அவர்கள் புனைந்திருக்கிறார்கள்.

அதுபோல இன்னும் நிறைய எடுத்துக் காட்டலாம். ஆனால் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்க நேரமில்லை. படித்துப் பார்க்க வேண்டிய

பாடல்கள். இந்தப் பனுவல் கற்க விரும்பிக் கற்பார்க்குப் பயனுள்ளது. எனவே உணர்வு நிலையில் நம்மை ஈர்க்கக் கூடிய இப்படிப்பட்ட செய்யுளை நூறாசிரியத்தைப் படித்துப் பயன்கொள்ள வேண்டும்.

அவர் உரை எழுதாத பகுதிக்கு அவருடைய மாணவர் இறைக் குருவனார் அவர்கள் உரை எழுதியுள்ளார். ஏறத்தாழப் பெருஞ்சித்திரனார் என்ன கூற விரும்பினாரோ அதேபோல் இவரும் உரைவிளக்கம் எழுதி உள்ளார்.

எனவே அந்த வகையில் நூலைப் போற்றி, பயன்படுத்தி உணர்வு பெற்று சிறப்புற வேண்டும் என்ற வேண்டுதலோடு இந்நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.!

- இவ்வாறு பேராசியர் உரையாற்றினார். ●

அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

நம் ஐயா அவர்களின், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக வெளிவருகின்ற தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களில் 1986 வரையிலான இதழ்கள் கட்டடம் செய்யப்பெற்று சலுகை விலையில் தென்மொழி சுவடி 20 வரை மற்றும் தமிழ் நிலம் எண் 80 வரை விற்பனைக்கு உள்ளன.

அன்பர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பதிப்பகங்கள், நூலகங்கள், பள்ளி, கல்லூரிகள், இந் நல்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம். விற்பனை விளத்தங்கள் கீழ் வருமாறு கொடுக்கப் பெறுகின்றன.

	தென்மொழி	**விலை**
1.	சுவடி - 6 முதல் சுவடி - 11 முடிய உள்ள இதழ்கள்	15-00
2.	சுவடி - 11 - தொகுப்பு (முழுமையாக)	15-00
3.	சுவடி - 12 - தொகுப்பு (முழுமையாக)	15-00
4.	சுவடி - 16 தொகுப்பு -	17-00
5.	சுவடி - 19 தொகுப்பு -	18-00
6.	சுவடி 20 தொகுப்பு -	20-00
7.	சுவடி 21 தொகுப்பு முழுமையாக -	17-00
8.	சுவடி 22 தொகுப்பு முழுமையாக -	17-00
9.	சுவடி 23 தொகுப்பு முழுமையாக -	25-00
10.	சுவடி 24 தொகுப்பு முழுமையாக -	28-00
11.	சுவடி 25 தொகுப்பு முழுமையாக -	29-00
12.	சுவடி 26 தொகுப்பு முழுமையாக -	40-00
13.	சுவடி 27 தொகுப்பு முழுமையாக -	50-00

தமிழ்ச்சிட்டு

1. *குரல் 19 இசை 1 முதல் 12 முடிய*
   குரல் 20 இசை 1 முதல் 12 முடிய - முழுமையாக *24-00*
2. *குரல் 21 இசை 1 முதல் 12 முடிய*
   குரல் 22 இசை 1 முதல் 12 முடிய - முழுமையாக *35-00*

தமிழ் நிலம்

1 *இதழ் 1 முதல் இதழ் எண் - 80 முடிய -* *50-00*
2. *இதழ் 81 முதல் இதழ் எண் 110 முடிய -* *30-00*
3. *இதழ் 111 முதல் இதழ் எண் 140 முடிய -* *35-00*
4. *இதழ் 141 முதல் இதழ் எண் 174 முடிய -* *50-00*

அஞ்சற் செலவுகள் தனி. பதிவஞ்சலில் பெற அஞ்சற் செலவுடன் மேலும் உருவா ஆறு மட்டும் சேர்த்தனுப்புங்கள்.

வழக்கறிஞர் பொன்னழகன் மறைவு

தென்மொழி அன்பரும், புரப்பாளரும் ஆகிய வழக்கறிஞர் **பி.ஆர்.சி. பொன்னழகன்** *அவர்கள் கடந்த 19-3-96 அன்று மறைவுற்ற செய்தியை அண்மையில் அவர்தம் துணைவியார் அவர்களின் மடல் வழி அறிந்து மிக வருந்தினோம். 1987-ஆம் ஆண்டு நம் பாவலரேறு ஐயா அவர்கள் தமிழில் வழிபாட்டுரிமைக்கான வழக்குக்காகத் தில்லி உயர் வழக்கு மன்றத்தில் பேசித் தருக்கமிட நேர்ந்தபோது வழக்கறிஞர் பொன்னழகன் அவர்கள், ஐயா அவர்களுக்குத் துணை நின்றவர். ஐயா அவர்கள் தமிழில் பேசிய, பேச இருந்த செய்திகளை ஆங்கிலத்தில் பெயர்த்து ஐயா அவர்களின் கருத்தாகப் பேசியவர்.*

மேலும் "வெகு மக்கள் (பகுசன்) கட்சியின்" தலைவரான திரு. கன்சிராம் அவர்களை, ஐயா அவர்களுக்கும், ஐயா அவர்களைக் கன்சிராமுக்கும் அறிமுகப்படுத்தி - ஐயா அவர்களின் கருத்துகளை கன்சிராமுக்கு விளக்கிக் கூறியவர்.

அவ்வகையில் ஐயா அவர்களின் அருந்தமிழ்த் தொண்டின் மீது அக்கறை கொண்ட வழக்கறிஞராக இருந்த திரு. பொன்னழகன் அவர்கள் சில காலம் நோயுற்றிருந்து, நெஞ்சக மாற்று அறுவைப் பண்டுவத்தின் போது உயிரிழக்க நேர்ந்த பெருந்துன்பச் செய்தி நம்மை வருத்துகிறது. வழக்கறிஞர் திரு. பொன்னழகன் அவர்களின் பிரிவால் வாடும் அவரின் துணைவியார்க்கும், குடும்பத்தாருக்கும், அன்பர்களுக்கும், தென்மொழி தம்முடைய ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

– ஆசிரியர்



மக்களவை

ஏன் இந்த மகா நகர்?

ஐயா, இந்தியத் துணைக்கண்டத்தின் மாபெரு நகரங்களுள் ஒன்றும், மராட்டிய மாநிலத்தின் தலைநகரும், மிகப் பெருந் துறைமுகப் பட்டினமுமான பம்பாய் பெயர் மாற்றப் பெற்று இன்று 'மும்பை' என்று வழங்கப் பெறுகின்றது. தொன்மைச் சிறப்பும், தன்னுரிமை உணர்வூட்டமுங் கருதி மராட்டிய மாநில (சிவசேனை - பா்ரதிய சனதா) அரசு இம் மாற்றத்தைச் செய்திருக்கின்றது. பெயர் மாற்றத்தால் நேரும் எவ்வகைச் சிக்கலையும் அங்குள்ள ஆட்சியாளர்கள் பெரிதாகக் கருத வில்லை என்பது மட்டுமன்று; பொது மக்களிடையிலும் கடுமையான எதிர்ப்பு எழவில்லை என்பதுங் குறிப்பிடத் தக்கது.

ஆனால், தமிழ்நாட்டில் 'மதராஸ்' என்னும் உருது சொல்லின் ஆங்கில வடிவமான 'மெட்ராஸ்' (Madras) என்பதைத் தவிர்த்துச் சென்னை என்றே ஆங்கிலத்திலும் (Chennai) வழங்க வேண்டுமென்றால் இங்குள்ள 'மேதாவி'கள் முகஞ்சுளிக்கின்றனர்; ஏளனம் செய்கின்றனர்.

இந்நிலையில், எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல் சென்னை இனி 'மகா நகர்' (Megacity) என்று வழங்கப் பெறும் என்னும் அறிவிப்பு வெளியாகியுள்ளது. மாநகர் (City) என்றும், பெருநகர் (Metropolition) என்றும் வழக் கூன்றியிருக்கும். சென்னையைப் பெருமைப் படுத்துவது போல் பிறமொழிச் சொல்லை ஒட்டிச் சிறுமைப்படுத்தும் முயற்சியையே மாநகர் பற்றிய அறிவிப்பு வெளிப்படுத்துகின்றது. மாநகர், பெருநகர் என்பவற்றின் வேறான இன்னொரு பெயர் வேண்டுமென்றால் மாபெரும் நகர் என்றே கூடக் கூறலாம். அதை விடுத்து மகாநகர் என்று கூறவது தமிழ்மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாதது மட்டுமன்று; தமிழையே இழிவுபடுத்துவதுமாகும்! **— நா தண்டபாணி,** அம்பல்.

குறிப்பு : மகாநகர் என்பதில் மகா என்பது வடமொழிச் சொல்லாதலால் அதனை ஏலாது எதிர்ப்பது ஒன்று. ஆநபயஉவைல என்பதைத் தமிழில் வியநகர் - வியனகர் எனலாம். விட்டிசைத்தலின்றி மாநகர், பெருநகர் என்றாற் போல் ஒரு சொல் நீர்மைத்தாம். இது சொல்லளவிலானது. இனி, சென்னை, கல்கத்தா, தில்லி, மும்பை என்னும் நான்கு வியனகரங்களும் பன்னாட்டு மாநகரங்களெனப் (International Cities) பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவை மாநில அரசுகட்கு மட்டுமன்றி நடுவணரசுக்குங்கூடக் கட்டுப் படுவன அல்லவென்றும், தன்னுரிமை ஆளுமையுடையன வென்றும் கூறப்படுகின்றது. அவ்வாறு அமையுங்கால் இங்கு வாழும் மக்கள் முற்றும் புறக்கணிக்கப்படுவர். மொழிச் சொலையும், பண்பாட்டுச் சீரழிவும் வரம்பின்றிப் பெருகுதல் ஒருதலை

— இறை.

நூறாசிரியம் வெளியீட்டு விழா உரைகள்

வரவேற்புரை - மா. பூங்குன்றன்

பாவலரேறு ஐயா அவர்களின் படைப்புகளில் ஒன்றான நூறாசிரியம் எனும் அரிய நூல் கழகக் காலப் பாடல்களுக்கு ஒப்பானது. விழுமிய மெய்யியல் கருத்துகளைக் கொண்டது. தன் இளமைக் காலத்திலேயே தென்மொழித் தொடங்கி ஓராண்டு நின்றிருந்த காலத்திலே அவர்தம் நன்னெஞ்சத்தால் உருவானது இவ்விலக்கியம்.

இந்நூலை வெளியிடுவதற்கு அவர் எடுத்துக்கொள்ளும் உந்துதல் எண்ணத்தின் படிவே இப்போது எங்களை உற்றி இப் பெருமைமிகு பெரு நூலை வெளியீட்டுக் கொண்டது என்றே கூறலாம்.

இந்நூலின் வெளியீட்டிற்கு உடல்நலக் குறைவினால் அம்மை சாலினி இளந்திரையனார் வரவியலாது போகவே, தமிழீழத்தின் நிலைகளை உலகமெலாம் அறியும் பொருட்டு உலக ஒன்றிய அவையிலே புகுந்து எடுத்துரைத்த பெருமைக்குரிய திரு. வைகுந்தவாசன் அவர்கள் இசைந்து வருகை தந்திருக்கிறார்கள். தி.மு.கழகச் செயலாளர் பேராசிரியர் அன்பழகனார் நூலினைப் பற்றிக் கருத்துரையாற்ற இசைந்திருக்கிறார். மற்றும் அறிஞர் பெருமக்களெல்லாம் வருகை தந்திருக்கிறார்கள். அருந்தமிழ் ஆர்வலர்களும், தென்மொழி அன்பர்களும் பல்வேறிடங்களிலிருந்தெல்லாம் வருகை தந்திருக்கிறார்கள். அனைவரையும் நூறாசிரியம் வெளியீட்டு விழாக் குழுவின் சார்பில் மனமார வரவேற்கிறேன்.

தலைமையுரை - புலவர் இறைக்குருவனார்

ஐயா அவர்களுடைய நூல்களெல்லாம் சொற்செறிவும் பொருளாழமும் வாய்ந்தவை; பாக்களெல்லாம் யாப்பமைதியும் உணர்வோட்டமும் சிறந்தவை; சிந்தனையாழமும் பட்டறிவுத் தெளிவும் கொண்டவை. இருந்தாலுங்கூட இத்தகைய பண்புகளெல்லாம் நிறைந்து - அடர்ந்து விளங்கும் தலை சிறந்த நூல் நூறாசிரியம். இதன்கண் உள்ள பாடல்கள் ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே தொடங்கி எழுதப்பெற்றவை. இன்றியமையாத் தேவை கருதி இடையிடையே மேலும் மேலும் எழுதிச் சேர்க்கப்பெற்றமையால், இது நூறாசிரியம் என்று பெயர்தாங்கியிருந்தாலும் இதன்கண் நூற்று இருபத்து நான்கு பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

பாடல்கள் மட்டுமல்லாமல் அவற்றுக்கு விரிவான உரைவிளக்கமும் கட்டாயத் தேவை என்று கருதி ஐயா அவர்கள் அவ்வப்போது உரை விளக்கம் எழுதித் தென்மொழியில் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்கள்.

அவ்வாறு அறுபத்தாறு பாடல்கள் மட்டுமே வெளிவந்தாலும் பின்னுள்ள முப்பத்தாறு பாடல்களுக்கு உரை விளக்கம் எழுதிச் சேர்த்து நூறாசிரியத்தை முழுமையான வடிவில் அரிய முயற்சியாக வெளிக்கொணர்ந்திருக்கிறோம்.

வெளியீட்டுரை - வைகுந்தவாசன்

பதினைந்தாண்டுகளுக்கு மேலாக நான் ஐயா அவர்களுடன் தொடர்பு கொண்டவன். ஒவ்வொரு முறை தமிழகம் வரும் போதும் ஐயா அவர்களைச் சந்தித்துவிட்டே செல்வேன். மிகப் பெரும் தமிழர் தலைவரைத் தமிழகம் இழந்திருக்கிறது. நான் இந்த நூலை வெளியிட வரவில்லை. ஐயா சாலையார் உடல் நலக்குறைவால் வர இயலாமையால் நான் இந்த நூலை வெளியிடப் பணிக்கப்பட்டேன்.

ஈழத் தமிழர் விடுதலைக்காகவும், தமிழகத் தமிழர் உரிமைக்காகவும் தொடர்ந்து உறுதியாகக் குரல் கொடுத்தவர் நம் பெருஞ்சித்திரனார் அவர்கள். இங்கு ஐயா இருந்தால் எப்படி தொடர்ந்து ஈழத்தமிழர்க்காகக் குரல் கொடுப்பாரோ அப்படி அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். இங்கு அறிஞர்கள் பெருமக்கள் பலர் நிறையப் பேச இருக்கிறார்கள் அவர்கள் நூறாசிரியம் பற்றி விரிவாகக் கூறுவார்கள்.

நூல் அறிமுகவுரை – சொல்லாய்வு அறிஞர் அருளியார்

ஐயா அவர்கள் தம் பாட்டில், தாம் எப்படி வாழ்ந்தார் - எப்படி கொள்கைச் செயற்பாட்டுக்காகத் தம்மை இழந்து துணிவோடு யாருக்கும் அஞ்சாமல் செயல்பட்டார் என்பதை விளக்கியிருக்கிறார். இந்நூலைக் கூர்ந்து கவனித்தால் ஐயா அவர்கள் தம் வாழக்கையில் நடந்த பல்வேறு செய்திகளை நுட்பமாக ஒரு வரலாற்றுப் பதிவாகவே செய்துவிட்டுப் போயிருக்கிறார் என்பது விளங்கும்.

இத்தனை யாண்டுக்காலம் அவர் இந்த இனத்திற்காக உழைத்தும் இங்கு வந்திருக்கிற குறைந்த கூட்ட எண்ணிக்கையைப் பார்க்கிற போது,

'பாவொடு ஊறிய பைந்தமிழ் மைந்தனைப்
பயன்படுத்தும் வகை அறிவிலாப் பேதையர்'

- அவர் தம்மைப் பயன்படுத்திக் கொள்ள அறிவிலாப் பேதையர் களாகத் தமிழினத்தவர் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். இன்றைக்கு இருபத்தாறு ஆண்டுகட்கு முன்பு '**நூறாசிரியம்** தென்மொழியில் வெளிவந்தபோது, அதில் முன்னுரையாக,

'புரையும் கறையும் நிறைந்த போலி இலக்கியப் படைப்பு மிகுந்த இக்காலத்து, நிறையும் விரையும் கலந்த' இத்தகைய நூல்கள் வாழ்க்கைக்கு ஒளியும் வழியும் காட்டுவன என்பதைப் படிப்பார் தெள்ளிதின் உணர்வார்'

என்று எழுதுகிறார்.

எந்த நூலை எடுத்துக் கொண்டாலும் அந்த நூலின் கருத்துக் கேற்ப அந்த நூலில் பா வகையை ஏற்று எழுதியதில் ஐயா அவர்களின் தனித்திறம் வியத்தற்குரியது. இவ்வகையில் அவருடைய அரிய கருத்துகளை தமிழினம் முழுமையும் பரப்ப வேண்டியதே மொழி இன அடிப்படையில் செயலாற்ற வருகிறவர்களின் அடிப்படைக் கடனாக இருக்க முடியும்.

ஏற்புரைகள்

சுப. திருமாறன்: ஐயா அவர்களின் மறைவுக்குப் பின் இந்நூலைக் கொண்டு வந்ததற்கு மகிழ்ச்சி. பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோர் அனைவருக்கும் இந்நூல் மிகுந்த பயனுடையது. அனைவரும் இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.!

புலவர் ஆறுமுகம் : ஐயா அவர்கள் தம் இறுதி மூச்சு உள்ளவரை இத் தமிழினத்திற்காகப் பாடுபட்டார்கள். இத் தமிழனை உயர்த்தாமல் நான் சாகமாட்டேன் - என்று அடிக்கடி ஐயா கூறினார்கள். நான் எட்டாம் வகுப்பு மாணவனாக இருந்ததில் இருந்து ஐயா அவர்களின் எழுத்தைப் படித்து வருகிறேன். அவரைப்போன்றோர் இனி யாரும் வரமுடியுமா - எனத்தெரியவில்லை. புறநானூறு போன்று கூட எழுதிவிடலாம். ஆனால் துணிவோடு நூறாசிரியம் போன்ற கருத்துகளை யாரும் எழுதிட இயலாது. பேசுவதே சிக்கல் என்ற நேரத்தில் கூட 'தணு'வைப் பற்றிப் பாடல் எழுதிய துணிவு யாருக்கும் வராது.

அருள்மணி : தம் பெயரைக்கூடத் தமிழ்ப் பெயராக மாற்றிக் கொள்ளாதவர்கள், தமிழ்ப் பாவலர்கள் என்று கூறிக்கொண்டிருக்கிற இக்காலத்தில் ஐயா அவர்களின் தொண்டு மிகச் சிறந்தது, உயர்ந்தது. அதை முழுமையாய் நாம் பயன்படுத்த வேண்டும். ஐயா அவர்களின் நூல்களை மக்கள் கூட்டம் ஏற்க வில்லையே என்ற கவலை ஐயாவுக்கே இருந்தது. அதுபோல் அல்லாமல் ஐயாவின் நூல்களை நாம் முழுமையாய் பயன் படுத்த வேண்டும்!

புலவர் அரசமாணிக்கனார் : நமக்கெல்லாம் எடுத்துக் காட்டாய், வழிகாட்டியாய் உள்ள ஐயா அவர்களின் பெரும் பணி வியப்பிற்குரியது. மனத்துக்கண் மாசிலனாக வாழ்ந்த ஐயா அவர்களின் பெருவாழ்வின் பயனாய் இருக்கும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதில்

பெருமகிழ்வடைகிறேன்.

மா.செ.தமிழ்மணி: வாழும் திருவள்ளுவராய் நம்முடன் வாழ்ந்த ஐயா அவர்கள், கழகக்காலப் புலவர்களின் பா நடை போலும் சிறந்த பாநடையில் யாத்தது இந்த நூறாசிரியம். ஐயா அவர்கள் வலிமையான எழுத்தாற்றலால் மட்டும்அல்லாமல் இத்தமிழ்ப்பெருமக்களின் விடுதலைக்காக வாழ்ந்தார்கள், போராடினார்கள். ஐயா அவர்களின் நூறாசிரியம் பயின்று மகிழ்வது ஒருபுறம் இருக்க - நம்மை நாம் ஆளாக்கிக் கொள்ளக் கூடிய செய்திகள் ஏராளமாய் உள்ளன. நாம் இதைப் படித்துச் செயல் படுத்துவதையே பணியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பறம்பை அறிவன் : கழக காலப் பாடல்களுக்கு ஒப்பான அளவில் இயற்றப்பெற்ற நூல் இது. மிகவும் மறைக்கப்பட்ட வரலாற்றைக் கொண்ட நம் மினத்திற்கான வரலாற்றுச் சான்றுகளைக் கொண்ட நூலாக இந்நூறாசிரியம் உள்ளது.

இளவேனில் கழராம்பன்: "தொண்டு செய்து பழுத்த பழம், தூயதாடி மார்பில் விழும் மண்டைச் சுரப்பை உலகுதொழும், மனக்குகையில் சிறுத்தை எழும்" - எனப் பாவேந்தர் பெரியாரைப் பாடிய வரிகள் அப்படியே நம் ஐயா அவர்களுக்குப் பொருந்தும். பல்லாயிரம் ஆண்டுகளின் மூத்த தமிழைப் பேணித் தூய தொண்டாற்றிய அப் பேரறிஞரின் பணியை நாமும் மேற்கொண்டு செய்திடல் வேண்டும்.

இறையழகன்: திருக்கழுக்குன்றம் மறைமலையடிகள் மன்றத்தினரை யும், என்னையும் பார்க்கும் போதெல்லாம் அனைவரின் நலமும் கேட்டுப் புரக்கும் நம் ஐயா எங்கே-அவர்பணியைத் தென்மொழியினர் நாம் மேற்கொள்ள வேண்டும்!

நக்கீரன்: நான், ஐயா அவர்களின் நூறாசிரியத்தைப் பெறுகிற அளவிற்கு தகுதி வாய்ந்த படிப்பாளி அல்லன்; ஒரு தொண்டன்: ஐயா அவர்களின் மொழி, இன, நாட்டு விடுதலை உணர்வுக்காக அவர்களை ஏற்று அங்காந்து இருப்பவுன்; விடுதலையைத்தேடி வாழ்பவன்; ஐயா அவர்களின் கொள்கையைத் தாங்கி நாம் நடையிட வேண்டும்.

நூல் கருத்துரைகள்

முனைவர் நன்னன் : நல்ல தமிழ்ச் சொற்கள் இல்லையே என்று ஒருபுறம் கவல்கிறோம். மறுபுறம் இருக்கிற பழைய நல்ல சொற்களைச் சாகடித்துக் கொண்டிருக்கிறோம். சொல்லாட்சியை இழந்து வருகிறோம். செறிவோடு அழுத்தமாய்ச் சொல்லுகிற பாங்குகளை இழந்து வருகிறோம். நூற்றுக்கணக்கான நூல்கள் ஏராளமாய் வந்து

கொண்டுள்ளன. ஆனால் நுட்பமான வெளிப்பாடுகளைக் கொண்டனவாக வரவில்லை. இந்நிலைக்கு மாறாக இந்த நூல் மிக நுட்பமாய் -அழுத்தமாய் எழுதப்பெற்றுள்ளது.

அறிவு விரிவாய்ப் பெருகப் புறப் பொருள் பாடல்களைப் படிப்பதை விட அகப் பொருள் பாடல்களைப் படித்தல் வேண்டும். புறப்பாடல்களில் விரிவாய் எழுதியிருப்பார்கள் அகப்பாடல்களில் விளக்கமாய் இல்லாமல் மறைவாய் எழுதியிருப்பார்கள். அவ்வகையில் மறை குறிப்பாகவும் நிறைய செய்திகளை எழுதியுள்ளார்கள்.

படித்தால் புரியாது என்பது சரியில்லை. படித்துப் புரிந்து கொள்ள வேண்டுவது இன்றியமையாதது. உரைநடைஎன்பது கருத்தைப் படிக்கிற கருவி, செய்யுள் என்பது கருத்தை ஊறவைக்கிற கருவி.

அவ்வகையில் தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போல் அருமையான நூல் இது. பொருளடக்கத்தில் ஒவ்வொரு பாடலும் எது பற்றியது என்னும் விளக்கம் இணைத்திருப்பின் இன்னமும் சிறப்பாய் அமைந்திருக்கும்.

முனைவர் அரசேந்திரன் : பாவலரேறு ஐயா அவர்களின் படைப்புகள் அனைத்தும் அரிய, இறவர்து காலங்கடந்து நிற்க வல்ல படைப்புகள். அவற்றுள் மிக மிக விழுமியதாக, ஆற்றல் சான்றதாக இருப்பது நூறாசிரியம்.

ஐயா அவர்களின் பாடல் ஆற்றல் வாய்ந்ததாக இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. நேர்மையானவராக தூய்மையானவராக, வாய்மையானவராக, மக்கள் பற்றுடையவராக இருந்ததுவே ஐயா அவர்களைச் சிறந்த பாப்பொழிவாளராக்கியது.

ஒருவர் நம்மை எதிர்க்கிறபோதே நமக்கு ஊக்கம் அதிகமாகும். அப்படியானால் ஆரியர் நம்மை எதிர்த்ததின் வழி நாம் நிரம்ப ஊக்கம் பெற்றிருக்கவேண்டும். அப்படியில்லாதபடி இவ்வினம் அடிமை நிலையில் உள்ளது.

ஐயா அவர்களின் உண்மை நிலை - அவ்வாரியத்தை எதிர்த்து நின்றது. இந்நூறாசிரியத்தில் பன்னிரண்டு பாடல்கள் இந்தி எதிர்ப்புக் குறித்து இருக்கின்றன.

விருகம்பாக்கம் அரங்கநாதன் இந்தியை எதிர்த்து தீயிட்டுக் கொண்ட காட்சியை - காட்சியளவில் மட்டும் விளக்காமல் 'உங்களில் இவ்வருஞ் செயலையொட்டி இங்குள்ள எவர் எவர்பின்பற்றுவர். எவர் போராட முன்வருவர்' என்ற இன உரிமை அங்கப்பாய் ஐயா அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

அவ்வகை ஆற்றல்சால் பாடல்களை நாம் பயனாக்குவதே நம் கடமை.

முனைவர் கடவூர் ப. மணிமாறன் : அரசியல் பண்பாட்டு நாகரிகம் என்று வருகிற போது பேரறிஞர் அண்ணாவை மறக்கமுடியாது. அது போலப் பகுத்தறிவு, குமுகாயச்சீர்திருத்தம் என்கிறபோது தந்தை பெரியாரை மறந்து விடமுடியாது. அதைப்போலத் தமிழ் என்றால், தமிழ் இனம், தமிழ்நாடு என்று சொல்லுகிற போது நம்முடைய பாவலரேறு ஐயா அவர்களை விட்டுவிட்டு எவரும் ஏதும் எழுதிவிட முடியாது.

ஐயா அவர்கள் தமிழ் மரபோடு ஊறித்திளைத்தவர்கள். மரபு உலகத்தை விளித்து இந்நூறாசிரியத்தின் முதல், இரண்டாம் பாடல்களை இயற்றியுள்ளார்கள்.

1965-இலே நாங்கள் எல்லாம் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருந்தபோது ஐயா அவர்களின் எழுச்சிமிகு பாடல்கள் எங்களை உணர்ச்சி முகப்பில் வைத்தன.

பாவலரேறு ஐயா அவர்களின் படைப்புகளையும், பாவேந்தர் அவர்களின் படைப்புகளையும் முறையாக ஒப்புநோக்கி ஆய்ந்து நான் முனைவர் பட்டத்தை 91-ஆம் ஆண்டு திருச்சியில் பெற்றவன்.

பாவேந்தர் 'தமிழியக்கத்தை - எழுதினார். ஆனால் பாவலரேறு ஐயா அவர்கள் 'தென்மொழி' இதழ் இயக்கத்தைத் தமிழ் உள்ள வரை நடக்கிறபடியான நிலையில் செயல்வழி இயக்கத்தை அமைத்தார்.

" இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதியிருக்கின்றதென்பானும் இருக்கின்றானே" - என்று எழுதினார் பாவேந்தர். ஆனால் நம்முடைய ஐயா அவர்கள் தம் மக்கள் அனைவர்க்கும் கலப்புத் திருமணம் செய்வித்துச் சாதியை ஒழித்துச் செயல்படுத்திக் காட்டியவர்கள்.

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்பதாகப் பாவேந்தர் எழுதினார். ஆனால் நம்முடைய பாவலரேறு ஐயா அவர்கள் எத்தனை `தடா'வழியும் பிறவழியும் ஆண்டுக் கணக்கிலே சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார்கள்!

ஆக, அவ்வகையில் நின்ற நம்முடைய பாவலரேறு ஐயா அவர்களைத் தொடர்ந்து நாம் செயல்படுவதே இத்தமிழ் இனத்திற்கு இன்றியமையானது.

பழ. கருப்பையா: ஐம்பது, அறுபது இலக்கம் பேர் வாழ்கிற சென்னையில் மிகக் குறைவானவர்களே ஐயா அவர்களைப் பற்றி

எண்ணி இங்கு வந்திருக்கின்றனர். நாம் தமிழர் என்கிற நிலைக்கு இன்றைக்கு வளர்ந்து - மீண்டும் பழைய நிலைக்குத் தாழ்ந்து போயிருந்தாலும் தாழ்வில்லை - அதைவிட இழிவான நிலைக்குப் போய்விட்டோம். தமிழர் - என்கிற ஒருமை உணர்ச்சி வராமல் சாதிகளாக அல்லவா பிரிந்து போய்க்கிடக்கின்றனர். பெருஞ்சித்திரனார் குடும்ப அளவில் கலப்புத் திருமணங்களைச் செய்திருந்தால் போதுமா? இன்றைக்குத் தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்களில் அடிபடுபவர்கள் இரண்டு பச்சைத் தமிழச் சாதியர்கள்தாமே சாதியின் பெயரால்தானே மாநாடுகள் இங்கே கூட்டப்படுகின்றன. சாதி ஒழிப்புக்கான சிந்தனை இங்கு இல்லையே. சாதி அமைப்புகளெல்லாம் தத்தம் சாதித்தலைவர்க்குப் போக்குவரத்துக் கழகம் கோருபவையாக அல்லவா இருக்கின்றன. தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டங்கள் எழுச்சி பெறவில்லையே, ஈழத்தைப் போன்றதொரு எழுச்சி இங்கு இல்லையே? அது எப்போது வரும் ஐயா பெருஞ்சித்திரனாரைப் போன்று ஆயிரம் பேர் தோன்ற வேண்டும். அதற்கு முயலவேண்டும்.

இரா. பாவாணன் : அறியாதார் அறியத் தமிழ்ச்சிட்டும், அறிந்தார் தெளியத் தென்மொழியையும் பணவலிமை கொண்ட எந்த ஒரு கட்சியும் தொடர்ந்து இதழ் நடத்த முடியாமல் இருக்கிறபோதும் - ஐயா அவர்கள் தொடர்ந்து நடத்தினார்கள். நான் கல்லூரியில் படிக்கிறபோது அங்கு வந்த கண்ணதாசன் - நம் ஐயா அவர்களின் பாடலை மிகப் பாராட்டிக் 'கழகக்காலத்திற்கு இணையாகப் பாட்டெழுதக் கூடியவர்' - என்று கூறினார். நம் ஐயா அவர்கள் கழகக் காலத்தின் புலவர்க்கு ஈடாக வாழ்ந்தவர்கள்; எழுதியவர்கள்.

எளிமையான நடையிலும் எழுத்து வல்லமைப் பெற்றிருப்பினும் எளிமையான எழுத்து நடை மண்ணால் கட்டப் பெறுகிற வீடு போன்றது - என்பார் ஐயா அவர்கள். வன்மையான எழுத்து காலத்தாலும் நிற்கும் என்பார்கள். ஐயா அவர்களின் எழுத்து யானையின் நடைபோன்றது. அவ்வகையில் அழுத்தமுடையது. அவ்வகை 'நூறாசிரியம்' காலத்தால் நிற்பது.

அரசியலில் அழுத்தமான அடக்கு முறையுள்ள காலங்களில் கூட ஐயா அவர்கள் உறுதியோடு பாடல் எழுதினார்கள். ஈழத்தமிழர்க்காக இங்கு நானொருவன் இருக்கிறேன் என்று அறிவித்தார்கள். தணுவுக்காக, தமிழரசனுக்காக எழுதினார்கள்.

சிலம்பொலி செல்லப்பனார் : ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் நெருக்கடியிலேயே வாழ்ந்தவர்கள். சேலத்தில் பொன்னம்பலனார் என்கிற தமிழ்ப்புலவரின் மாணவர் அவர். புலவர்

பொன்னம்பலனார் அனைவருக்கும் தமிழிலேயே பெயர் வைத்தவர். நாம் பல தமிழ்ப் பேரறிஞர்களைத் தொடர்ந்து இருந்து வருகிறோம்.

இந் நூறாசிரியம் பல்வகையிலும் சிறப்புடையது. இதில் உள்ள பாடல்களை விரித்துக் கூறி விளக்குகிற அளவில் நேரமில்லை. மற்ற பாக்களைவிட ஓசையால் பெயர் பெற்ற சிறப்புப் பொருந்தியது ஆசிரியப்பா. அந்த அளவில் ஓசைச் சிறப்பும், பிற அனைத்துச் சிறப்புகளும் கொண்டதாய் நூறாசிரியம் அமைந்துள்ளது.

நன்றியுரை – அன்னை தாமரை பெருஞ்சித்திரனார்

வருகைதந்திருக்கின்ற சான்றோர்க்கும், பெரியோர்க்கும், இளைஞர்க்கும் நன்றி கூறுகிறேன். 'எந்தக் கட்சியில் நீ இருந்தாலும் இனத்தை மறந்திடாதே - தமிழா இனத்தை மறந்திடாதே' - என்றார் ஐயா அவர்கள். இங்குச் சிறு கூட்டமாக இருந்தாலும் இன அளவில் ஒன்று பட்டு ஐயா அவர்களின் கருத்துப்படி இயங்க வேண்டும். ஐயா அவர்களின் கனவை நனவாக்கி, தமிழ் மொழி, இன, நாட்டு விடுதலைக்குப் போராட வேண்டும். ஈழவிடுதலைக்கு ஆதரவாய் நிற்க வேண்டும் என்று கூறி, அனைவர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ●

'நூறாசிரியம்' வெளியீட்டு விழாவில் . . .

கடந்த மாதம் (மீனம் 3) சென்னையில் நடைபெற்ற 'நூறாசிரியம்' நூல் வெளியீட்டு விழாவில், திருக்கழுக்குன்றம் மறைமலையடிகள் மன்றத்தின் சார்பில் மன்றச் செயலாளர் திரு. இறையழகன் உருபா ஐந்நூறு கொடுத்து நூற்படியைப் பெற்றுக் கொண்டார்.

திருவாளர்கள் கழராம்பன், அரசமாணிக்கனார், மா.செ. தமிழ்மணி, நக்கீரன், அருள்மணி, பறம்பை அறிவன், சுப. திருமாறன், சாத்தனர் ஆறுமுகம், இரா. பாவாணன், வைகுந்தவாசன், பாவலர் இளஞ்சித்திரன் ஆகியோர் நூல் பெற்றுக் கொண்ட வகையில் மொத்த வரவு உருபா. 2105.00 மட்டும்

தமிழீழத்தின் இன்றைய போர் நிலை

தஞ்சை. நலங்கிள்ளி (அமெரிக்கா)

1994ஆம் ஆண்டின் இறுதியிலும், 1995ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களிலும் விடுதலைப்புலிகளின் கை ஓங்குவதையும், அந்நிலை தொடர்ந்தால் தமிழீழம் விரைவில் விடுதலை பெறும் நிலை ஏற்படக் கூடும் என்பதையும் உணர்ந்த இந்திய அரசு, சிங்களப் படைக்குப் பெருமளவில் போர்க்கருவிகளும், வேறுநாடுகளிலிருந்து போர்க் கருவிகள் வாங்கப் பணமும் கொடுக்க முன்வந்தது. இதே போலத்தான் 1987-இலும் புலிகளின் கை ஓங்குவதைக் கண்டு, இந்திய அரசு இந்தியப் படையை ஈழத்துக்கு அனுப்பிவைத்து அவர்களை ஒழித்துக் கட்ட முனைந்தது.

விடுதலைப்புலிகளின் கரந்தடி போர் (கொரில்லாப்போர்) முறை களுக்குத் தாங்கமாட்டாமல் ஏறத்தாழ இரண்டரை யாண்டுகளுக்குப்பின் ஈழத்தை விட்டு வெளியேறியது. சூடுபட்ட பூனை பாற்சட்டிப் பக்கமே போகாதென்பது போல, இன்று தனது படையை ஈழத்துக்கு அனுப்பவில்லை இந்திய அரசு. மாறாகச் சிங்களப்படைக்குப் போர்க்கருவிகளைக் கொடுத்துதவுகிறது.

1995 மே திங்களின் தொடக்கத்தில் இந்தியத் தலைமையமைச்சர் இராவும், சிங்களவ ஆட்சித்தலைவர் சந்திரிகாவும் சந்தித்துப் பேசிய போது இந்திய அரசு சிங்களவ அரசுக்கும் பெருமளவில் போர்க்கருவிகளும், பிறநாடுகளிலிருந்து போர்க் கருவிகள் வாங்கப் பண உதவியும் கொடுப்பதாக முடிவெடுக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் பெருமளவில் போர்க்கருவிகள் வந்திறங்கிய செய்தியை மே மாதம் 22-ஆம் நாளிலிருந்து செய்தித் தாள்கள் அவ்வப்போது வெளியிட்டன.

இவ்வாறு போர்க்கருவிகளை நிறையப் பெற்ற சிங்களப்படை யாழ்ப்பாண நகரைத் தாக்கியது. அந்த நிலையில் யாழ்ப்பாண நகரிலிருந்தே தொடர்ந்து போரிடுவதா அல்லது நகரை விட்டு வெளியேறி ஊர்ப்புறங்களிலும், காடுகளிலுமிருந்து போரிடுவதா என்று விடுதலைப்புலிகள் முடிவு செய்தாக வேண்டும். சிங்களப்படை பெருவாரியான படைக்கருவிகளோடு யாழ்ப்பாண நகரைத் தாக்குவதால், நகரைவிட்டு வெளியேறி, வெளிப்புறங்களிலிருந்து சிங்களப் படையை தக்க நேரங்களில் தாக்குதே தக்கமுடிவு என்பது கரந்தடி போர் முறை நுணுக்கங்களை அறிந்தார் கருத்தாகும். இது தோல்வியன்று. இது மறைந்துறை (கொரில்லாப் போர்முறை) போர்முறை!

ஒரு நாட்டின் படைக்கும், ஒரு விடுதலைப் படைக்கும் இடையே நடக்கின்ற போர் ஒரு யானைக்கும் புலிக்கும் இடையே நடக்கின்ற சண்டையைப் போன்றதாகும். யானை புலியை விடப் பருமனானது, வலிமையானது. அதைப் போலவே ஒரு நாட்டின் படையும் விடுதலைப் படையைவிட அதிகப் படையாளர்களும், போர்க்கருவிகளும் உடையதாகவே இருக்கும். வியத்னாமியர் பிரஞ்சுப்படைக்கும், பின்னர் அமெரிக்கப் படைக்கும் எதிராக நடத்திய போரானாலும் சரி, ஆப்கானித்தானியர் உருசியருக்கு எதிராக நடத்திய போரானாலும் சரி, இது உண்மையே.

தனது வலிமையெல்லாம் ஒன்றுதிரட்டிப் பெருவாரியான படையாளர்களோடும், போர்க்கருவிகளோடும் (ஒரு யானையைப் போல) தாக்கவரும் போது, விடுதலைப்படை தனது போர்க்கருவிகளோ போராளியர் எண்ணிக்கையோ பகைப்படையை விடக் குறைந்ததாக இருக்குமானால் பகைப்படை. அண்டிவரும் வரையிலும் தன் தளத்திலே காத்திருந்து அவர்களுடன் போரிடாமல் (மிக்க வலிமையோடு தாக்க வரும் யானையின் முன்னே புலி நிற்காதது போல) தன் தளத்திலிருந்து வெளியேறிப் பகைப் படையைச் சமயம் பார்த்துத் தக்க வேளைகளில் பக்கத்திலிருந்தும் பின்புறமிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாகத் தாக்கி (புலி யானையை இடப்புறமிருந்தும் வலப்புறமிருந்தும், பின்புறமிருந்தும் தாக்குவது போல) பகைப் படைக்குப் படிப்படியாகப் பெருஞ்சேதம் விளைக்கும். இது கரந்தடி போரின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று.

மேற்கண்ட யானை-புலி உவமையைச் சொன்னது யார் தெரியுமா? வியத்னாமின் புகழ்பெற்ற கரந்தடி போர் வல்லுநர் கோ-சி-மின் (Ho-Chi-Min). இத்தகைய போர் முறையால்தான் முதலில் பிரஞ்சுப்படையை வடவியத்னாமிலிருந்தும், பின்னர் அமெரிக்கப் படையை தென் வியத்னாமிலிருந்தும் வெளியேற்றினார். இதே போர்முறையைப் பயன்படுத்தித்தான் ஆப்கானிய விடுதலைப் படை உருசியப்படையை ஆப்கானித்தானத்திலிருந்து வெளியேற்றியது. இதே போர்முறையைப் பயன்படுத்தித்தான் நமது தமிழீழ விடுதலைப்புலிகள் சில ஆண்டுகளுக்கு முன் இந்தியப் படையை ஈழத்திலிருந்து வெளியேற்றினார்கள். இதே முறையைத்தான் இன்றும் விடுதலைப்புலிகள் பயன்படுத்தியிருக் கிறார்கள். இதைப்பார்த்துவிட்டு " ஆகா, விடுதலைப்புலிகள் யாழ்ப்பாண நகரை விட்டு வெளியேறி விட்டார்கள். இனித் தமிழீழ விடுதலை வெறுங்கனவே" என்று சிங்களவர் வாண வேடிக்கையுடன் மகிழ்ச்சிக் கூத்தாடுவதும், சில இந்திய, சிங்களத் தாளிகைகள் ஆசிரியவுரைகள் எழுதி மகிழ்வதும் அவர்தம் பகற்கனவே யன்றி வேறில்லை!

இனி நடக்கப் போவதென்ன? யாழ்ப்பாண நகரின் சுற்றுப் புறங்களிலும், ஊர்ப்புறங்களிலும் காடுகளுக்குள்ளும், ஈழ நாட்டின் கிழக்குப் பகுதியிலும் விடுதலைப் புலிகளின் பாசறைகள் உள்ளன. அப்பாசறைகளிலிருந்து அவ்வப்போது சிங்களப் படையைத் தாக்கித் சேதம் விளைப்பார்கள். ஈழ நாட்டின் கிழக்குப் பகுதியில் அண்மையில் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையும், நடமாட்டங்களும் அதிகரித் திருப்பதாகச் செய்தித்தாள்கள் சிலவற்றில் செய்திகள் வந்துள்ளன. சிங்களப் படை யின் பெரும்பகுதி யாழ்ப்பாணத்திலே குவிக்கப்பட்டுள்ள நிலையில், கிழக்குப் பகுதியில் உள்ள சிங்களப் படையை தக்க வேளைகளில் தாக்கிக் கொல்லுவார்கள். அவர்களுக்கு உதவியாக யாழ்ப்பாணத்தில் குவிக்கப் பட்டிருக்கும் சிங்களப் படை கிழக்கே அனுப்பப்பட்டால், மிஞ்சியுள்ள சிங்களப் படையை யாழ்ப்பாணத்திலே தாக்குவார்கள் (யானை இடப்புறம் திறம்பும் போது வலப்புறமிருந்தும், வலப்புறம் திரும்பும் போது இடப்புறமிருந்தும் புலி தாக்குவது போல).

சிங்களப்படையாளர்கள் இங்கே பத்து அங்கே பத்து, வடக்கே ஐம்பத்து, கிழக்கே ஐம்பது என்று படிப்படியாகக் கொல்லப்படுவார்கள். அவர்களது போர்க்கருவிகளும் இங்கொன்று அங்கொன்றாக அழிக்கப்படும். அழிக்கப்பட்ட போர்க்கருவிகளுக்கீடாக அது போன்ற போர்க்கருவிகளை இந்திய அரசு கமுக்கமாகக் (இரகசியமாக) கொடுத்துதவக் கூடும். (யார் இந்தியாவின் தலைமையமைச்சராக இருப்பது, தமிழ்நாட்டில் இந்தியா சிங்களப் படைக்கு உதவுவதைத் தொடர்ந்து எத்தனைப் பேர் எதிர்த்துப் பேசுகிறார்கள், போராட்டம் நடத்துகிறார்கள் என்பதைப் பொறுத்தது அது) யார் இந்தியாவின் தலைமையமைச்சராக இருந்தாலும், அவர் விடுதலைப் புலிகளால் படிப்படியாகக் கொல்லப்படும் சிங்களப் படையாளர்களுக்கு இணையாக இந்தியப் படையாளர்களைக் கொடுத்துதவுவது ஐயமே.

அது மட்டுமன்று, சிங்களப் படையாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லப் படுவதையும், காயமடைவதையும் காணும் பிற சிங்களப் படையாளர்கள் பலர் படையை விட்டு விலகித் தங்கள் வீடுகளுக்குப் போய்விடுவார்கள். 1994-இலும், 1995-இன் தொடக்க மாதங்களிலும் இப்படி நடந்த செய்தியைச் சில செய்தித்தாள்கள் வெளியிட்டிருந்தன. அந்நிலையில் புதிதாகப் படையில் சேர வெகு சில சிங்களவரே முன்வருவர். சிங்களப் படையாளர்கள் படையைவிட்டு விலகி வீடுகளுக்குப் போய் விடுவதையும், புதிதாகப் படையில் சேரும் சிங்களவர் சிலரே என்பதையும் பற்றிய விரிவான ஒருகட்டுரை 1995 சூன் திங்களில் ஆங்கில நாளிதழ் ஒன்றில் வெளிவந்திருந்த்து. இந்நிலை விடுதலைப் புலிகளுக்கு இது வரையிலும் ஏற்பட்டதில்லை, ஏற்படப் போவது மில்லை. சிங்களப் படையைப் போன்ற கூலிப் படையினரல்லர்

விடுதலைப்புலிகள். ஒவ்வொரு புலியும் தன் உயிர்பெரிதன்று, தம் மக்களின் (தமிழ் ஈழ மக்களின்) வருங்கால நலமே பெரிது என்று தான் புலிப்படையில் சேருகிறான்.! படையாளர்களுக்குச் சம்பளம், உணவு, போர்கருவிகளை வாங்கப் பணம் எனச் சிங்கள அரசு ஈழத்தமிழ் மக்களை அடிமைப்படுத்தி வைப்பதற்காகப் பெரும் பணச் செலவு செய்ய வேண்டியதிருக்கும். சிங்கள அரசு போருக்காகப் பெருஞ்செலவு செய்கிறதென்றும், அதைக் குறைக்காவிட்டால், தாங்கள் ஆண்டுதோறும் தரும் பண நன்கொடைகளும், கடன்களும் குறைக்கப்படும் அல்லது நிறுத்தப்படும் என்றும் ஐரோப்பிய நாடுகள் கடந்த சில ஆண்டுகளாகச் சொல்லிவருகின்றன.

இவ்வாறாகச் சிங்களப்படையின் வலிமை படிப்படியாகச் குறைவது, போருக்காகப் பெரும் பணச்செலவு, ஐரோப்பிய நாடுகள் பண நன்கொடைகளைக் குறைப்பது என்ற நிலையில், ஈழத்தமிழ் மக்களைக் காலங்காலமாகத் தங்களுக்கு அடிமையாக வைத்துக் கொள்ள வேண்டுமென எவ்வளவுதான் விரும்பினாலும், சிங்கள அரசு தமிழ் ஈழ விடுதலையை அரைமனம் கால் மனத்தோடாவது ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும். இந்த இக்கட்டான நிலை இதுவரையிலும் ஏற்படவில்லை. 1987இன் தொடக்கத்தில் ஏறத்தாழ இத்தகைய சூழல் ஏற்படும் நிலை இருந்தது. அதனால் தான் இந்தியா தனது படையை 1987இன் இறுதியில் ஈழத்துக்கு அனுப்பிவைத்தது.

அந்நாளைய சிங்கள ஆட்சித்தலைவர் செயவர்த்தனா 1990- வாக்கில் தாளிகையொன்றுக்குக் கொடுத்த நேருரையில் (1987-இல் என்நாடு (அதாவது, சிறீலங்காவைக் குறிப்பிடுகிறார்) இரண்டாகத் துண்டிக்கப் படும் நிலை ஏற்பட்டிருந்தது (அதாவது, தமிழ் ஈழம் சிங்களவரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுத் தனி நாடு அமைக்கும் நிலை ஏற்பட்டிருந்தது). அதனால் தான் இந்தியப் படை என் நாட்டுக்கு வர ஒப்புதல் தெரிவித்தேன் என்று சொன்னார்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக விடுதலைப் படைகள் வெவ்வேறு நாடுகளில் வெற்றி பெற்ற வரலாறுகளைப் படித்துப் பார்த்தால், நாட்டுப் படையின் படையாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப், படிப்படியாகக் கொல்லப்படுவது, போருக்காகப் பெரும் பணச் செலவு இவைகளே விடுதலைப் படைகளின் இறுதிவெற்றிக்குக் காரணமாயிருந்தன என்பதை உணரலாம். சில எடுத்துக் காட்டுகள்.

பிரான்சு நாடு அல்சீரிய நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டு வந்தது. பிரஞ்சுப் படையாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லப்பட்டதை யும் பெரும் பணச் செலவு ஏற்படுவதையும் கண்டு பிரஞ்சுமக்கள்

முணுமுணுக்கத் தொடங்கினார்கள். இந்நிலையில்தான் பிரான்சு அல்சீரியாவுக்கு விடுதலை கொடுத்தது.

அமெரிக்கா மிகச் செல்வமுள்ள நாடு. அதன் மொத்தப் படையாளர்களின் எண்ணிக்கை பத்து இலக்கத்துக்கு மேல். போர்க்கருவிகளின் எண்ணிக்கை சிங்களவருக்கு இருக்கும் போர்க்கருவிகளைவிடப் பலவாயிரம் மடங்கு பெரிது. அமெரிக்கப்படையை எதிர்த்துப் போராடிய வியத்னாம் ஏழைநாடு. அதன் படைவலி மிக மிகக் குறைவு ஆனாலும் அமெரிக்கப்படை வியத்னாமிலிருந்து வெளியேறியது ஏன்? இங்கே பத்து, அங்கே பத்து என்று சிலவாயிரம் அமெரிக்கப் படையாளர்கள் கொல்லப்பட்டார்கள். ஆண்டு தோறும் கோடிக் கணக்கான பணம் செலவானது. இந்நிலையில் வியத்னாமில் போராடிய அமெரிக்கப் போர்வீரர்களே "இந்தப் போரில் நாம் வெற்றி பெற முடியுமா? அது எப்போது நடக்கப் போகிறது? நாம் போராடுவது வீணா?" என்று முணுமுணுக்கத் தொடங்கினார்கள். அதனால் தான் அமெரிக்கா வியத்னாமை விட்டு வெளியேறியது.

இதே காரணம் தான் ஆப்கானித்தானத்திலும், உருசியப் படையாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லப்பட்டார்கள். போருக்காகப் பல கோடிப் பணச் செலவு. "இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நாம் இங்கு போரிடுவது?" என்ற உருசியப் படைவீரர்களின் முணுமுணுப்பு இந்நிலையில் தான் உருசிய அரசு ஆப்கானித்தானத்திலிருந்து வெளியேறியது.

இது போன்ற நிலை சிங்களவ அரசுக்கும் ஏற்படும். நமது விடுதலைப்புலிகள் பல ஆண்டுகளாக நடத்திவரும் விடுதலைப் போர் வெற்றிபெறும். தமிழீழம் உலக அரங்கில் விடுதலைபெற்ற தனி நாடாக மலரும்! அந்த விடுதலைப் போருக்கு அனைத்துத் தமிழரும் துணை நிற்போமாகுக. ●

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் – 300/–
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் – 200/–

சிறப்பு மடல்:

தென்மொழியில் என் பாடல் முழுமையாக இடம் பெறவில்லையே!

வண்டலூர், சென்னை–48

11, மீனம்/2027 (24.3.96)

அன்புநிறை நண்பர் இறைக்கு,

வணக்கம். நலம். நலமறிய விழைவு.

'நூறாசிரியம்' நூல் வெளியீட்டு விழாவில் வந்து கலந்து கொண்டமைக்கு நன்றி தெரிவித்துத் தாங்கள் அனுப்பியிருந்த மடல் கிடைத்தது. மிகுந்த மகிழ்ச்சிகள், நெஞ்சு கனிந்த நன்றிகள்.

தென்மொழி - மீனம் இதழ் தொடர்ந்த அடுத்தநாள் வந்தது. மிகுந்த ஆவலுடன் பிரித்துப் பார்த்தேன். ஏன் எனில் என் அரும்பெறல் ஆசிரியர் ஐயா அவர்களின் மறைவுக்குப் பின் - எட்டு மாதங்கட்குப் பின் தென்மொழியில் எனது பாடல். மகிழ்ச்சிக்குச் சொல்லவா வேண்டும்? ஆனால் ஏமாற்றம்தான் கிடைத்தது. பாடல் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டில்லை!

பாடல் தலை இழந்த முண்டம் போல் காட்சி தந்தது. தலைப்பில் முதல் பாடல் இல்லை. இரண்டாம், மூன்றாம் பாடல்களே இருந்தன. தென்மொழியைப் பொறுத்த அளவில் எனக்கு இப்பட்டறிவு ஏற்பட்டதே இல்லை. ஐயா அவர்கள் எனது பாடல்களை எப்பொழுதுமே முழுமையாகவே வெளியிட்டிருக்கின்றார்கள். எந்த நிலையிலும் என் பாடல்களைக் குறைத்து வெளியிட்டதில்லை. (ஏன் திருத்தியது கூட இல்லை) ஐயா அவர்கள் எப்பொழுதுமே கருத்துக்கே முதன்மை தருவார். அப்பாடலில் அப்படி என்ன கருத்துக்குறை? எனக்குத் தோன்றவில்லை! சொல்ல வேண்டியவற்றையே சொல்லியிருக்கின்றேன். என்ன? அதில் என்னை முன்னிலைப் படுத்திக்கொண்டு எழுதியிருக்கின்றேன். தவறா? இது போன்று பிற பாவலர்கள் எழுதமாட்டார்கள்! அவர்கள் மூன்றாம் தட்டு, இரண்டாம் தட்டு, நான்காம் தட்டுப் பாவலர்கள். இரண்டாம் தட்டுக்குக் கூட அவர்கள் வரமுடியாது. இன்றைய பாவலர்களில் பெரும்பாலோர் இரண்டாம் தட்டுப் பாவலர்களே!

முதல் தட்டுப் பாவலர் என்போர் தன்னை முன்னிலைப்படுத்தி எழுதுவோர். அவரே குமுகாயத்தைத் தன் பின்னே இழுத்துச் செல்ல

கடிதத்தின் இயல் நிலை கருதிப் பிழைகளும் பிறமொழிச் சொற்களும் களையப் படாமலே உள்ளன.

வல்லவர்கள். புரட்சிக்கான காலத்தை உருவாக்குபவர். அவ்வரிசையில் நம் காலத்தில் பாரதி, பாவேந்தர், என் அரும்பெறல் ஆசிரியர் பாவலரேறு ஐயா அவர்கள். அவர்கள் வரிசையில் நின்றுதான் நான் அப்பாடலை எழுதினேன். தம்பி பொழிலனும் அதனை விரும்பித் தெரிந்தெடுத்துக் கொண்டான்.

ஐயா அவர்கள் இருக்கும் பொழுதே என்னை முன்னிலைப் படுத்தி எழுதிய பாடல்கள் வெளிவந்திருக்கின்றன. ஐயா அவர்களே அவற்றை விரும்பி வெளியிட்டிருக்கிறார்கள். இதோ அவை -

(1) "தாழா தினிஎம் தலைஒருக் காலும் தமிழ்க்கிழிவு
சூழா திதுவரை சூழ்ந்தது மில்லை ....."

(2) "சாகவில்லை நானொருவன் இருக்கின்றேன்! உன்றன்
தளைநீக்கி அரசமைக்கும் கொள்கைகளை விட்டுப்
போகவில்லை! ...."

(3) "இந்தப் பிறப்பில் எனக்கொரு வாழ்க்கை
இனிதான் தொடக்கம்! இறந்திட மாட்டேன்!"

(மூன்றாவதாகக் "குறிப்பிடப்பட்டிருக்கும்" அப்பாடல் "மீட்போலை" இதழில் முகப்பட்டையில் வெளியிடப்பட்டதும் கூட)

ஐயா அவர்கள் காலத்தில் இப்பட்டறிவை நான் பெற்றதில்லை. ஐயா அவர்கள் நினைத்திருந்தால் அப்பாடல்களை அவர்கள் வெளியிடாமல் தவிர்த்திருக்கலாம்.

ஐயா அவர்கள் அடிக்கடி சொல்வார். தம்பீ, எழுதிக் கொண்டிருங்கள். என் சுவைஞனாக இருங்கள். மாணவனாக இருங்கள். களத்திற்கு வந்துவிடாதீர்கள்! நேரம் வரும். நான் சொல்வேன். வாருங்கள். உங்களைச் சரியாக வெளிப்படுத்துவேன்!" என்று. ஐயா அவர்கள் இயற்கை எய்திய இரண்டு திங்கட்கு முன்புகூட இதன் கருத்தையே (தனது ஆசையாக) அழகு ஒளியிடமும் சொல்லியிருக்கின்றார்.

நான் ஐயா அவர்களைப் போன்றே போலித்தனத்திற்கும் பொய்மைக்கும் விளம்பரத்திற்கும் ஆட்பட்டுவிடமாட்டேன். உண்மைக்கே என்றும் நிற்பேன். அருள் செய்து என்னைப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் தென்மொழிக்கு வருவதற்கு முன்னரே தென்மொழிக்கு வந்தவன். ஐயா அவர்களுடனும் குடும்பத்துடனும் இரண்டறக் கலந்தவன். "தேவராசு என் வயிற்றில் பிறக்கவில்லையேனும் அதுதான் இந்த வீட்டின் மூத்தபிள்ளை. பொற்கொடிக்கு அண்ணன்" என்று அம்மா சொல்வார்கள், ஐயா அவர்கள் அகமகிழ்வார்கள்.

உண்மையான பாவலனின் பாட்டுணர்ச்சியில் எழுதப் பெறும் மடல் இது. தொடரின் பெருகும். எனினும் இன்னொன்று.

என் அரும்பெறல் ஆசிரியர் மறைவின் பொழுது, அத்தாக்கத்தில் " உங்கள்மேல் ஆணை" என்றொரு பாடல் எழுதி வெளியிட்டேன். 2000 படிகள் எடுத்து ஐயா அவர்களின் இறுதி ஊர்வலத்தின் பொழுது மக்கட்கு வழங்கச் செய்தேன். அது எல்லாப் பாவலர்களும் எழுதுவது போன்று பொதுவாக எழுதப்பெற்றது அன்று. இறைவன்தன் கட்டளையால் ஐயா அவர்களால் முதல் வரி எடுத்துக் கொடுக்கப் பெற்று எழுதப்பெற்றது. அதனைத் தென்மொழியில் வெளியிடுவீர்கள் என்று அனுப்பி வைத்திருந்தேன். தொலைபேசியிலும் சொன்னேன். எதிர்பார்த்தேன். ஏமாற்றமே!

பொதுவான 4 வரிகளைப் போட்டிருந்தீர்கள். இவ் வரிகளை யாரும் எழுதுவார்கள். ஆனால் இந் நான்கு வரிகட்கு முன்னும் பின்னும் உள்ள வரிகளை யாரும் எழுதமாட்டார்கள்.

ஆனால், என்ன வியப்பு? அப் பாடலை முழுமையாக எனக்கு உயிர் உறவுத் தொடர்பில்லாத 'எழுகதிர்", 'மீண்டும் கவிக் கொண்டல்' ஆகிய இதழ்கள் வெளியிட்டிருந்தன.

தொடர்ந்து, எனக்கு இம்மடலை நீட்டித்து எழுத விருப்பம் இல்லை. ஏன் எனில் நான் உண்மையானவன். ஐயாவைச் சரியாகத் தெரிந்து கொண்டவன், புரிந்து கொண்டவன். ஐயா அவர்களின் இதயத்தில் அவர் உயிர்க்கொள்கைகள் வழிச் சரியாக இடம் பெற்றுக் கொண்டவன்.

பிறபின். நன்றி. வணக்கம். இவண் அன்புடன்

இளஞ்சித்திரன்.

புலவர். தூக்கியத்திருவடி மறைவு

தென்மொழியின் நீண்டநாள் அன்பரும், தொடக்க காலம் முதல் தமிழ்நிலம் முகவருமான உளுந்தூர்ப்பேட்டை புலவர். ந.தூக்கியத்திருவடி (எ) நடன குஞ்சிதபாதம் அவர்கள் 24-4-94 அன்று இயற்கையெய்திய செய்தி அவரின் மகன் சேக்கிழார் அவர்களின் வழியாக அண்மையில் தெரிய வந்தது. அவர்களின் பிரிவு குறித்து வருந்துகிறோம்.

தம் இறுதி நாள் வரை திரு. தூக்கியதிருவடி அவர்கள் 'தமிழ்நிலம்' இதழ் பெற்றுச் சுற்று வட்டாரத்திலுள்ள பலரையும் இம்மொழி, இன, நாட்டுணர்வூட்டி வளர்த்தார்கள். அன்னாரின் பிரிவால் வாடும் அவரின் குடும்பத்தார்க்கும் அன்பர்களுக்கும், தென்மொழி தம்முடைய ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. – **ஆசிரியர்**

தமிழ்க்களம் நோக்கி ...



நம் அரும்பெறல் ஆசான் ஐயா பாவலரேறு அவர்களின் தமிழ்க்களம் - அமைப்பு முயற்சி என்பது வெறுமனே ஒரு நினைவக அமைப்பு முயற்சி அன்று.

தம் வாழ்நாள் முழுமையும் சொல்லும், செயலும் வேறுவேறாக இல்லாமல் மொழி, இன, நாட்டுரிமைக்காக அல்லும் பகலும் உழைத்தவர் ஐயா அவர்கள்.

தம்மளவில் மட்டும் அல்லாமல் இத் தமிழ்மொழி மாந்தரை அமைப்புப்படுத்தி இயங்க வைக்க ஐயா அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி மிகப்பெரிது.

உள்ளத்திலே உண்மையொளியாய், உதட்டினிலே கனிந்த மொழியாய்க் கள்ளமற்ற தொண்டுநலம் செய்த அப் பெருந்தகையின் இழப்பு இத் தமிழ்ப்பெரு மக்களினத்தின் இழப்பு.

அவ் விழப்பைக் குறைந்தளவேனும் ஈடுசெய்ய வேண்டுமென்றாலும் நாம் நிறைந்த உழைப்பைக் கொடுக்க வேண்டியுள்ளது.

அவ்வகை நம் உழைப்பின் குவியமாக இருப்பதே தமிழ்க்களம்.

நமக்குச் செயலூக்கம் கொடுத்து இயங்க வைக்கிற, நம் செயல்களின் திரள் நடுவமாகத் தமிழ்க்களத்தை நாம் அமைத்திடல்வேண்டும்.

அவ்வகையில் - அதன் அமைப்புக்குத் தமிழ் மொழி, இன, நாட்டியல் உரவோர்களின் கருத்தாக்கங்களும், செயலூக்கங்களும், பொருளுக்கங்களும் பெருமளவில் தேவை.

ஐயா அவர்கள் எப்படி அனைவர்க்கும் பொதுவினரோ - அப்படியே ஐயா அவர்களின் கொள்கைச் செயற்பாடுகளும் அனைவர்க்கும் பொதுவானவையே.

எனவே தமிழ் மொழி, இன, நாட்டியலில் அக்கறை கொண்ட அனைவரின் துணையிலுமே நாம் 'தமிழ்க்களம்' - அமைக்க எண்ணுதல் வேண்டும்.

- அவ்வகையில் தமிழ்க்களம் அமைக்கிற பொறுப்பை அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களை நிறுவனராகக் கொண்ட

'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை' - ஏற்றுள்ளது.

- ஐயா அவர்களின் பெயரிலான 'அறக்கட்டளை' - பதிவு செய்யப்பெற்றும் அவ்வறக்கட்டளைக்குப் பெறப்படுகிற நன்கொடைத் தொகைக்கு வருமான வரி விலக்கும் (80-G-இன் மடல் எண்:வ.வ.இ. (வி) எண் - 2 (334) - 95-96-நாள்:19.1.96) பெறப்பட்டுள்ளது.

- தன் மூச்சுயிர்ப்பான 'தென்மொழி' யை ஐயா அவர்கள் தொடர்ந்து கொண்டு வருவதற்குப் பட்ட இன்னல்கள் கொஞ்சநஞ்சமன்று பொருளியல் முடைக்கும், அரசின் தடைக்கும் இடையிலும் அதை ஏறுநடைபோட வைத்தார்கள் நம் பாவலரேறு அவர்கள்.

- தாம் கட்டி அமைத்த உண்மை உழைப்பியக்கமான உ.த.மு.க.வை எவ்வகையிலும் உயர்த்திச் செயற்படுத்திட ஐயா அவர்கள் செய்த முயற்சிகள் பெருமளவின.

- 'தென்மொழி'யை நடத்துகிற பொருளியல் இக் கட்டுகளுக் கிடையிலும் 'தமிழ்நிலத்'தையும் 'தமிழ்ச்சிட்டை'யும் தொடர்ந்து நடத்தி அரும் பணியாற்றினார் ஐயா அவர்கள்.

- அம் முயற்சிகளின் தொடர்ச்சியாய் ஐயா அவர்களின் வினை நோக்கத்தின் நீட்சியாய் நம் செயல்பாடு உயர்ந்தோங்க வேண்டியுள்ளது.

- அதற்கான செயற்களமே 'தமிழ்க்களம்'

* நம் ஐயா அவர்கள் எழுதி வெளிவராமல் இருக்கிற நூல்கள் அனைத்தையும் வெளியிடுவது.

* "பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் நூல் தொகுப்பு" - என்கிற வகையில் ஐயா அவர்களின் அனைத்து வகை வெளிப்பாடுகளையும் நூல் மடலங்களாகக் (Volumes) கொண்டு வருவது...

* நம் வினைக் களத்திற்கான தமிழ்க்களத்தை அமைப்பது..

- இவ்வரும் பணிகள் காலத்தே செய்யப்பெற வேண்டுவது இன்றியமையாதது.

- அப்பணி ஏராளமாய்ப் பொருள் தேவையைக் கொண்டது. எனவே இத் தமிழ்ப் பெருநில உரிமை முயற்சிக்கான தமிழ்க்கள அமைப்புக்குத் தூண்களாய் நின்று நாம் பணியாற்றுவதும், அதன் வேர்கள் ஊன்ற நறு நீர் வார்ப்பதுமே இன்றைய உடனடித்தேவை என்கிற வகையில் அனைவரையும் நாடுவோம்.

கடந்த 15.4.96 - முடிய நன்றியுடன் பெறப்பட்ட 'தமிழ்க்கள' அமைப்புக்கான தொகைகள்:

1. பணவிடை வழி, காசோலை வழி, நேரடியாக தென்மொழி மூலம் பெற்ற தொகை : உரு. 9325.00

2. பாவேந்தர் அறிவியல் இலக்கியப் பேரவை, புதுச்சேரி : உரு. 3000.00

3. செந்தமிழ்ச் சோலை, மணலிப்புதுநகர், சென்னை : உரு. 3000.00

4. அரசமாணிக்கனார், ஈரோடு வழி : உரு. 7000.00

5. தமிழ்நாடு முதன்மைத்தொழிற் பயிற்சி நிறுவனம், சென்னை (சரோசா அம்மையார் வழி) : உரு. 5000.00

6. தமிழரங்கன், நக்கசேலம் வழி 23 பேரிடமிருந்து நன்கொடையாக : உரு. 1500.00

7. அரணமுறுவல், சென்னை வழி : உரு. 1000.00

8. உலக முதல்வன், புதுச்சேரி வழி 170-பேரிடமிருந்து நன்கொடையாக : உரு. 3500.00

9. மா.செ.தமிழ்மணி, ஆட்டுப்பாக்கம் வழி : உரு. 1000.00

10. திருவள்ளுவர் மன்றம், நாகலாபுரம் வழி : உரு. 500.00

(குறிப்பு - அன்பர்கள் தமிழ்க்களத்திற்கு விடுக்கும் தொகைக்கான காசோலையை '**பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை**' என்ற பெயருக்கு அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்)

செய்திகள்

திருவள்ளுவர் திருநாள்

சென்னை - மணலி புதுநகரில், திருவள்ளுவர் திருநாளன்று (16.1.96) காலை 8.30 மணிக்கு அங்குள்ள திருவள்ளுவர் சிலைக்கு எண்ணூர் அசோக் இலேலண்டு பைந்தமிழ்ப் பாசறையின் சார்பில் திருக்குறள் மணி இறைக்குருவனார் மாலை அணிவித்தார். பாசறையின் துணைத்தலைவர் சிவபெருமான் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருநாளின் சிறப்புக்குறித்தும். மொழிப்போர் ஈகி கருணாநிதியைப் பாராட்டியும் உரையாற்றிய திருக்குறள் மணி தமிழ்நெறிக் குடும்ப உறுதி மொழிகளை முன்மொழிந்தார். நிகழ்ச்சிக்கு வருகை தந்தோர்

அனைவரும் உறுதி மொழிகளை வழிமொழிந்து சூளுரையாக ஏற்றனர். பாசறை ஏடலாளர் அன்புக்குமரன் நன்றியுரையாற்றினார்.

செந்தமிழ்ச்சோலை மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். முன்னதாகச் சோலையின் சார்பில் துணைத்தலைவர் துரை. இராவணன் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தார்.

பைந்தமிழ்ப் பாசறை– திருவள்ளுவர் தமிழ்ப்பணி மன்ற நிகழ்ச்சிகள்

சென்னை - எண்ணூர் அசோக் இலேலண்டு பைந்தமிழ்ப் பாசறையும் திருவொற்றியூர்த் திருவள்ளுவர் தமிழ்ப்பணி மன்றமும் இணைந்து தமிழ்ப்புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் திருநாள் விழாவைச் சுறவம் 12 வெள்ளி (26-1-96) அன்று திருவொற்றியூர் ஐ.டி.சி. தொழிலாளர் கட்டட அரங்கில் நடத்தின. பாசறைச் செயலாளர் துரை. தென்னவன் வரவேற்றுப் பேசினார். திருக்குறள்மணி புலவர் இறை. தருவனாரின் தலைமையுரைக்குப் பின் சொல்லாய்வு அறிஞர் அருளியார், 'தமிழ் வாழ்வியல் அறிவியல் மொழி' என்னும் பொருள்பற்றிப் பேருரையாற்றினார். திரளாக வருகைதந்திருந்த தமிழன்பர்கள் அனைவரும் அமைதியாகச் செவிமடுத்தனர்.

முன்னதாகவே மொழிப்போர் ஈகியரை நினைவு கூர்ந்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. தி. வேல்முருகன் நன்றி நவின்றார். மாலை 5 மணிக்குப் பாலகிருட்டிணா நகர் முதன்மைச் சாலையில் 'மலரட்டும் தமிழீழம்!' என்னுங் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாசறைத் தொடக்கவிழா

சென்னை - எண்ணூர் அன்னை சிவகாமி நகர் (பர்மாநகர்) அப்துல் இரகூப் அரங்கத்தில், சுறவம் 12 அன்று (26.1.96) மாலை 6.30 மணிக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாசறைத் தொடக்கவிழா திரு. இரவிச்சந்திரன் தலைமையிலும் திருவாளர்கள் வெ.உ. கலைமுத்து, எம்.வீரக்காளை, வி.கே. ஏழுமலை, மு.இரகுநாதன், மதிவாணன், தங்கவேல், மோகன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

தென்மொழி ஆசிரியர் அன்னை தாமரை பெருஞ்சித்திரனார் பாசறையைத் தொடக்கிப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார். செஞ்சொற் கதிரவன் அருளியார், திருவினர் மா.கா.ஈழவேந்தன், இகயல், தமிழோசை, வேல்முருகன், மணிமாறன் ஆகியோர் உரையாற்றினர். திரு.செல்வம் நன்றி நவின்றார். நிகழ்ச்சியில் பகுதி வாழ் மக்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

திருவள்ளுவர் மழலையர் பள்ளி ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா

சென்னை - திருவான்மியூர்த் திருவள்ளுவர் மழலையர் பள்ளியின் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா தி.பி.2027 மீனம் 23 அன்று (5-4-96) பிற்பகல் 3 மணியளவில், திருவான்மியூர் 'சிறீவித்தியா' திருமண மண்டபத்தில், 'எழுகதிர்' ஆசிரியர் முனைவர் **அரு. கோபாலன்** அவர்கள் தலைமையிலும், அன்னை தாமரைபெருஞ்சித்திரனார் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

திருக்குறள்மணி **இறைக்குருவனார்** வரவேற்புரையாற்றினார். தலைமையுரைக்குப் பின், அருங்கலை வல்லுநர் **திருக்குறள் இரா. கனகசுப்புரத்தினம்** அவர்களின் பதினாறு கவனக நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது.

சென்னைத் தொலைக்காட்சி நிலையப் படப்பிடிப்புத் துறை அலுவலர் திரு. **பி.சுபழனிச்சாமி** இ.ஒ.ப. அவர்கள், பள்ளியின் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா மலரை வெளியிட்டு உரையாற்றினார். மலரின் முதற்படியினை வேலூர் திரு. **செந்தமிழ்க்கோ** அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து, பள்ளி மாணவ-மாணவியரின் தலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருவள்ளுவர் விழாப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்க்கும், ஆண்டுவிழாக் கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ-மாணவியர்க்கும் சென்னை-மேரியரசி மகளிர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை **சரசுவதி** அம்மையார் பரிசளித்துப் பாராட்டுரை வழங்கினார். பள்ளியின் தலைமையாசிரியை **இறை. பொற்கொடி** நன்றி நவின்றார்.

பெற்றோர்களும் பொதுமக்களும் பெருந்திரளாக வருகைதந்து விழாவிற் கலந்துகொண்டனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறிஞர்களும் அன்பர்களும் வருகைதந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர்

தமிழின விடுதலையின் விடிவெள்ளியாக விளங்கிய நம் அரும் பெறல் ஐயா பாவலரேறு அவர்களின் முதல் நினைவு நாளான திபி2027 விடை 29 அன்று (11696) தென்மொழியின் சார்பாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர் வெளியிட ஆவன செய்து வருகிறோம்.

இம் மலரில் . . .

- பாவலரேறு அவர்களின் வாழ்க்கை வரலாறு - வரலாற்றின் தனிச் சிறப்பு நிலைகள்; 'தென்மொழி' வரலாற்றின் சிறப்பியல்கள் பற்றிய விளக்கக் கட்டுரைகள்,
- ஐயா அவர்களின் கைவண்ணம் மிளிரும் கருத்தார்ந்த ஓவிய வரைவுகள், அவர்தம் பொது வாழ்வுச் சிறப்பினைக் காட்டும் பொலிவுமிகு ஒளிப்படங்கள்,
- அரசியல் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள், பாவலர்கள், கலை வல்லுநர்கள் முதலானோர் ஐயா அவர்களைப் பற்றி வழங்கும் கட்டுரைகள், பாடல்கள்,
- ஐயா அவர்களுடன் தொடர்பு கொண்டியங்கிய தமிழீழப் போராளிகள், தலைவர்கள், மற்றும் கேரள, கருநாடக, ஆந்திர, மேல்பைதிர (உபி.) போராட்டத் தலைவர்களின் கட்டுரைகள்.
- மலையகம், சிங்கப்பூர், பிரான்சு, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலான நாடுகளில் இயங்கும் தமிழியக்கங்களைச் சார்ந்த சிறப் பாளர்களின் கட்டுரைகள்.

ஆகிய எழுத்துப் படைப்புகள் இடம்பெறுகின்றன.

மலர் 25 X 17 அமா. (செமீ.) அளவுள்ளதாகவும், தோராய மாக 400 பக்கங்களைக் கொண்டதாகவும் அமையும்.

தென்மொழி அன்பர்கள் தங்கள் பகுதிக்குத் தேவையான படிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்குமாறும், விளம்பரங்கள் பெற்று அனுப்புமாறு வேண்டுகிறோம்.

தென்மொழி'
சென்னை-600 005.

பாவலரேறு பெருஞ்சித்திரனார்
நினைவு மலர்க்குழுவினர்

தென்மொழி அச்சகம், சென்னை – 600 005. (தொலைபேசி எண் : 847829)